டங்களில்-it- என்பது சுட்டுச்சொல்லல்லவென்றறிக.) அன்றியும்-it- என்பது தனக்குப்பின்வருகிற வசனத்திற்றொகுப்புக்குப்பதிலாய்நின்று அத்தோடு பொருந்தும். உ-ம். It is well known that the earth is an oblate spheroid-பூமியானது அசாத்தியகோளமாயிருக்கிறதென்று(யாவரும்) அறிந்தகாரியமாம். இங்கே-it- என்பது வசனத்தின்மிக்கினவுறுப்புக்குப்பதிலாய்நிற்கின்றது. இவ்வாறேயவ்வசனத்தின்பொருளானது That the earth is an oblate spheroid is well known. என்பதற்கொக்கும் (இச்சமயத்தில்-it- என்பது வசனத்தின்மிக்கினபங்குக்குப்பதிலாயிருப்பதால்ப்பெயருக்குப்பிரதிச்சொல்லென்றறிக.)* (See Rule IX; Note 2.)

## உ௰. சூத்திரம்

இரண்டு-அல்லது பலவொருமையெழுவாய்கள்-And- என்பதாலிசைந்து வந்தால்-அவைகள் வினையையும் பெயருக்குப்பிரதிச்சொல்லையும்பன்மையில் வரக்கேட்கும். உ-ம். James and John are good boys, for they are busy. இயாகப்பும் அருளப்பனும் நல்லபிள்ளைகளாம், ஏனென்றவர்களெப்போதுமலுவலாயிருக்கிறார்கள் எனவரும்.

இரண்டு-அல்லது பலவொருமையெழுவாய்கள்-or-அல்லது-nor- என்பதாற்பிரிந்துநின்றவைகள் வினைச்சொல்லையும்பெயருக்குப்

---

* For excercises, see Supplement.

பிரதிச்சொல்லு மொருமையில் வரக்கேட்கும். உ-ம். James or John is dux. இயாகப்பாகிலும் அருளப்பனென்கிலுந் தோற்றுப்போனான் எனவரும்.

## விபரீத விதிகள்

௧ வது. இரண்டொருமைப் பெயர்கள்-and-என்பதாலிணைந்து (சேர்ந்து) வந்தாலும் (Emphatically) உறுதிப்பாடாய் விபரீதப்பட்டின்று அவைகள் வெவ்வேறு (propositions) களாய் விகல்பாக்குவதால் வினைச்சொல்லொருமையில் வரக்கேட்கும். உ-ம். Ambition and not the safety of the state was concerned. ஆசையே யொழிய விராட்சியத்தைக் காப்பாற்றுவது அவனுடைய கருத்தல்ல. Disgrace, and perhaps ruin was the certain consequence. அவமானமுமல்லாமற் சிலவேளை கேடுஞ் சந்தேகமின்றி நேரிட்டது- எனவரும்.

௨ வது. இரண்டொருமைப் பெயர்கள்-and-என்பதாலிணைந்து வந்தாலு, மொரேமனிதனை யல்லது-ஒரேவஸ்துவைக் குறித்தால் வினைச் சொல்லொருமையில் வரக்கேட்கும். உ-ம். The hue and cry of the country pursues him. தேசத்தில் (உண்டான) கூக்குரலுமுகைக்கத்தமு மவனுக்குப் பின்றொடர்ந்து வருகின்றது. Let us declare what great things our—

God and Saviour has done for us நம்முடைய கடவுளுமிரக்ஷகருமானவர் நமக்கெவ்வளவு பாராமானகாரியங்களைச் செய்தாரென்று அவளிப்படுத்தக்கடவோம் - என வரும்.

௩. சூ. And - என்பதாவிணைக்கு வருமிடன்றொருதம் பலவேறுவாயினும் - Each, Every- ஒவ்வொரு - 110 - இல்லை - என்பவைகளைத் தங்களுக்குமுன்கொண்டிருந்தால் - அவைகள் வெவ்வேறாகப் பிரிந்து நின்று வினைச்சொல்லையொருமையில் வரக்கேட்கும். உ-ம். Each worm and each insect is a marvel. ஒவ்வொரு புழுவும் பூச்சியுமாச்சரியமான காரியமாம். Every limb and feature appears with its respective grace. ஒவ்வொரு உறுப்புந்தோற்றமுந்தந்தமக்குரிய அழகோடு தோன்றுகின்றது - என வரும்.

(A.) மேற்சொன்னபிரகாரம் Each, Every- என்பதுக்குப்பின் வரும் பெயர்ச்சொற்களிலொன்று ஒருபாலிலும் வேறொன்று வேறேபாலிலுமிருந்தால் அவைகளுக்குப்பின் தமிழிலொரே சொற் பெயருக்குப் பிரதிச்சொல் வந்தபோதிலும். இங்கிலிஷிலதை யிரட்டித்து முந்தின பெயருக்குப் பிரதிச்சொல் மேற்சொல்லப்பட்டிருந்தின பெயர்ச்சொல்லுள்ள பாலிலும் பிந்தின பெயருக்குப் பிரதிச்சொல் பிந்தின பெயர்ச்சொல்லுள்ள பாலிலும் வைக்கவேண்டும். உ-ம். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு பெ

ண் பின்னையுந் திங்களுடைய நடக்கைக்குத் தகுந்தபடியே மதிக்கப்பட்டார்கள். Every man and every woman was esteemed according to his or her conduct. (See Sadler page 195.)

௪௨௯. எழுவாய்கள் வினையாலப்பிரிந்திருக்கும்போது வினையானது தனக்குமுன் வருகிற எழுவாயோடு பொருந்தி மற்ற எழுவாய்களுக்கு உள்ளடங்கியிருக்கும். உ-ம். 'Disdain forbids me, and my dread of shame'. அவமானத்தினிமித்தம் நான் பின்வாங்கிறதுமன்றி வெட்கத்துக்குப்பயந்து நான் பின்வாங்குகிறேன். 'The earth is the Lord's and the fullness thereof.' பூமி-ஆண்டவருக்குச் சொந்தமாயிருப்பதுமன்றி யதிலுள்ள சகலமும் அவருக்குச் சொந்தமாம்- என்வரும்.

---

## சிறப்புச் சூத்திரங்கள்

௪௩௦. வெவ்வேறிடங்களிலுள்ள எழுவாய்கள் தங்களுக்கிடையிலே யிணைப்புச்சுட்டிடைச்சொல்லைக் கொண்டிருந்தால் வினைச்சொல்லும் பெயருக்குப்பிரதிச்சொல்லும் முன்னிலையோடு பொருந்தாமல் தன்மையோடு பொருந்தும். அன்றியும் படர்க்கையோடு பொருந்தாமல் முன்னிலையோடு பொருந்தும். உ-ம். 'You and I have done our part' நீயும் நானும் நம்முடைய கடமையைச் செலுத்திப்போட்டோம். You and he ha

repeated your lessons. நீயும் வனுமுங்களுடையபா டங்களையொப்பித்துப்போட்டீர்கள்-எனவரும். அன்றியுமுன்னிலையிடச்சொற்களுக்கும்படர்க்கையிடச்சொற்களுக்கும் பின் தன்மையிடச்சொல்லை வைப்பதேமுறைமை. உம். you and I. write. நீயும் நானுமெழுதுகிறோம். He and I went away. அவனும் நானும்போய் விட்டோம்-என்வரும். ஆகிலும் பன்மையிலே. We நாமென்பது முதலாவதும். you- நீங்களென்பது-இரண்டாவதும்- They- அவர்கள்- அவைகளென்பது மூன்றுவதும் வரும். உம். We and they start tomorrow. நாங்களுமவர்களும் நாளைக்குப்புறப்படுவோம்-என்வரும்.

௨௱௮ And. என்பதாலிணைக்கு வருமிரண்டொருமையெருவாய்கள். ஒரேவஸ்துவென்றுபயன்(நினைவு- கருத்து) கொண்டால்வினைச்சொல்லையொருமையில் வரக்கேட்கும். உம். Curry-and-rice is wholesome. குழம்புஞ்சோறுஞ் சௌக்கியத்துக்கு நல்லது. The horse-and-bandy is at the door. குதிரையும்வண்டியுங்கதவுக்கிட்ட நிற்கின்றது. என்வரும். ஆயினும் வஸ்துக்கள்(ஒன்றாய்ச்சேராமல்) வெவ்வேறாய்ப்பிரிந்திருக்கிறதென்றுபயன் கொண்டால் வினைச் சொல்பன்மையில்வரவேண்டும். உம். Curry and rice are both good. குழம்புஞ்சோறும் நல்லது- என்வரும்.

௨௱௯ வெவ்வேறெண்ணிலுமிடத்திலுமுள்

ளெழுவாய்கள்- or- அல்லது- nor- என்பதைத் தொ
டையிற் கொண்டிருந்தால் வினைச்சொல்லும்
பெயருக்குப்பிரதிச்சொல்லும் பெரும்பாலு
ங் கடையில் வருமெழுவாயோடு பொருந்த
வேண்டும். உ-ம். Neither the general nor the soldi-
ers have arrived; though they were expected.
சேனாதிபதியாகிலுஞ் சேவகரென்கிலும் வரு
வார்களென்று காத்திருந்த போதிலுமவர்க
ளின்னம் வந்து சேரவில்லை. For you are to be
there காணல்லது நீங்களங்கேயிருக்கவேண்
டும்- என்வரும்

௧௨௨. Each, every- ஒவ்வொரு- no- இல்லை* எ
ன்கிற விசேஷணம் வினைச்சொல்லையும் பெய
ருக்குப்பிரதிச்சொல்லையும் ஒருமையில் வ
ரக்கேட்கும். உ-ம். Every man has his failings
குற்றமில்லாத மனிதனொருவனுமில்லை. Each
cow, sheep, and horse was sacrificed. ஒவ்-
வொரு பசுவும் ஆடுங் குதிரையும் பலியிடப்
பட்டது- என்வரும்.

௧௨௩. எழுவாய்களொன்றோடொன்றுசே
ர்க்காமலொப்பனையிட வேண்டிய போதாகி
லும். With- என்பது அவ்வெழுவாய்களிலொன்
றைக் கேட்கும் போதென்கிலும் வினைச்சொ
ல் ஒருமையில் வரவேண்டும். உ-ம். Caesar

---

*. No- என்பதற்குப்பின்றொருமைப் பெயர்ச்
சொல் வரும் போது மாத்திரம் வினையையும் பெ
யருக்குப்பிரதிச் சொல்லையும் ஒருமையில் வரக்கே
ட்கும்.

as well as Cicero was eloquent. சிசெரோவெ
ன்பவனைப் போலே சீசரென்பவனும் வாசா
லகருள்ளவனும். John with Thomas goes to
school. அருளப்பன் தோமாசோடே பள்ளிக்கூ
டத்துக்குப் போகிறான். என வரும்.

## ௯௰ம் சூத்திரம்

Collective nouns - கூட்டப்பெயர்கள் (unity)
ஏகம் அல்லது (oneness) என்ற வஸ்துவைக் கா
ட்டும் போது வினையும் பெயருக்குப் பிரதிச்சொ
ல்லும். ஒருமையில் வரவேண்டும். உ-ம். The meet-
ing expresses its assent. சங்கமானது தன்
சம்மதிக்கிறதாகச் சொல்லுகின்றதெ
ன வரும். ஆனால் (கூட்டப் பெயரானது) (Plu-
rality) பல வஸ்துக்களைக் காட்டும் போ
து வினையும் பெயருக்குப் பிரதிச்சொல்லும்
பன்மையிலிருக்கவேண்டும். உ-ம். The people
give their opinion. ஜனங்கள் தங்களுடை
ய கருத்தைச் சொல்லுகிறார்கள். என்வரும்.

## சிறப்புச் சூத்திரங்கள்

ஜுவகு. Mankind: மனுஷசந்ததி. Clergy-
போதகர் கூட்டம் - என்பவைகளைப் போலே
ஒருமைமாத்திரமுடைய கூட்டப்பெயர்கள்
(வினைச்சொல்லையும் பெயருக்குப் பிரதிச்சொ

ல்லியும்) பன்மையில் மாத்திரம் வரக்கூடு
ம். party - கட்சி(பக்கம்) என்பனவும் போலே
யிருமையுமுடைய பெயர்ச்சொற்கள். ஒ
ருமையிற் பிரயோகிக்கப்படும்போது வி
னைச் சொல்லியும் பெயருக்குப் பிரதிச் சொ
ல்லியு மொருமையில் வரக்கேட்கும். அவை
பன்மையிற் பிரயோகிக்கப்படும்போதோ
வெனில் வினைச்சொல்லியும் பெயருக்குப்பி
ரதிச் சொல்லியும் பன்மையில் வரக்கேட்
கும். உ-ம். The party is much divided and has
little influence. கட்சியானது மிகவும் பிரிந்து
போய்த் திரளின்றி அடங்கியிருக்கின்றது - எ
னவும். Parties are now nearly balanced, and
therefore all their movements are cautiously
made. கட்சிகளிப்போது கிட்டத்தட்டச் சரி
சமானமாய்ப் போனதினாலே யவர்களுடை
ய நடபடிக்கைகளெல்லா மெச்சரிக்கையா
ய் நடக்கின்றன - என வரும்.

உஅஅ. பன்மைப் பயனைக் கொள்ளும் பழ
க்கு (figuratively) பொருளியாக வொரு
மையில் வழங்குகின்ற வேறு சில பெயர்ச்சொற்
கள் வினைச்சொல்லிப் பன்மையில் வரக்கே
ட்கும். உ-ம். Twenty head of Cattle are for sale.
விற்கிறதற்கு இருபது மாடுகளுண்டு. எ
னவரும்.

உஅக. பன்மையில் மாத்திரம் வழங்கி ஒ
ரோவல் அவைக்குறியாத பெயர்ச்சொற்க

ன் வினைச்சொல்லையும் பெயருக்கும் பிரதிச் சொல்லையும் பன்மையில் வரக்கேட்கும். உ-ம். Riches do not always render their possessor happy. ஆஸ்தியானது தங்களையுடையவர்களை யெப்போதும் பாக்கியவானாக்குகிறதில்லை - என்வரும்

ஆகிலுஞ் செய்திகளொருமை யயமாத்திரங் கேட்கும். உ-ம். What is the news. சேதியென்ன - என்வரும். இவைகளொருமையையாகிலும் பன்மையை யென்கிலுங் கேட்கும். உ-ம். This means is suitable. இந்தவுபாயஞ் சரியாயிருக்கின்றது அல்லது These means are suitable. இந்தவுபாயங்கள் சரியாயிருக்கின்றன - என்வரும்.

---

# ௪௨ அதிகாரம்

பெயர்ச்சொல்லாவது பெயருக்கும் பிரதிச்சொல்லாவது தங்களுக்குப் பின் ஒருபெயரெச்சத்தைக்கொண்டு அவைகள் வசனத்திலே வேறேயொரு மொழியோடாவது சேராதிருந்தால் (Nominative independent) நேர்மாறான பெயர் வேற்றுமையிலிருக்கிறதென்று சொல்லப்படும். உ-ம். George being penitent, the king pardoned him. ஜார்ஜென்பவன் மனஸ்தாபப்பட்டதே - இராசா அவனுக்குப் பொறுத்துக்கொடுத்தான்-

என் வரும்.

## இறைப்புச் சூத்திரம்

இவ்வழக்கமான (Expressions) வாக்கியங்களிற் பெயரெச்சமானது பெயர்வேற்றுமைக்குமுன் வருவதே வழக்கம். உ-ம். Pending the suit. வழக்குத் தீராதிருக்க. During the contest. உயித்தமின்ன நடக்கக்கொள்ள — Notwithstanding his anger. அவனுடைய கோபத்தைப் பாராமல். என்வரும்.

## ௫௰. சூத்திரம்

ஏரேவசனத்திலோரேவஸ்துவைக்குறிக்கிற பெயர்ச்சொற்களும் பெயருக்குப்பின்னிற்கிற சொற்களும் வேற்றுமையிற் பொருந்தும். (அதாவது ஏரேவேற்றுமையில் வைக்கப்படும்.) உ-ம். Victoria the Queen. விக்டோரியாளென்னுமிராக்கினி. Whose books are these? Mine. இவைகளாருடைய புத்தகங்கள்? என்னுடையதுகள். என்வரும்.

## சிற்றப்புச் சூத்திரம்

இப்படியே பொருத்தியல்லது கிளைக்கு வருகிற பெயர்ச்சொற்கள் உடையவேற்றுமையிலிருக்கால் - 8 - என்று மெருத்தும் - கிடைக்குறையுடையாள்கும் வைகளிலொ

ன் றோடு மாத்திரம் பிரயோகிக்கப்படும். உ-ம். It is an essay of Bacon's, the philosopher; or of Bacon the philosopher's. ஞானசாஸ்திரி யான பேக்கனுடைய பரிட்சை - என வரும். (ஆகிலும்) கடைசிச் சொல்லிற் பல மொழிக ளடங்கியிருந்தால் (இவ்விரு வகைகளில்) முந்தின - method - வகையைப் பிர யோகிக்கவேண்டும்.

## சா௨ம் சூத்திரம்

தொடர்ந்து வருகிற இரண்டு பெயர்ச்சொ ற்களுள் (The latter) பிந்தின பெயர்ச்சொல் - (The former) முந்தின பெயர்ச்சொல்லுக்குச் சொந்தமாயிருக்கிறதென்று காட்டுதல் முந்தின பெயர்ச்சொல் உடையவேற்று- மையில் வைக்கப்படும். உ-ம். Veloo's turban. வேலுவென்பவனுடைய தலைப்பாகு - என வரும்

## சிறப்புச் சூத்திரங்கள்

௧ம். பிந்தின பெயர்ச் சொல்லானது பல வஸ்துக்களுக்குப் பொதுவிலே சொந்தமாயி ருக்கிற வோர் பொருளைக் குறிக்கும்போது அல்லது முந்தின பெயர்ச் சொல் வெவ்வேறா னதைக்கு மேல் நிலவார்த்தையுள்ளதா யிருக்கும்போது - கிடைக்குறையுடையாள

-டும். 8. என்று மெழுத்துங் கடைசிப்பெயர்க் கொன்றிலேமாத்திரம் வைக்கப்படும். உ-ம். John Thomas and Henry's estate. அருளப்பன் தோமாசு என்றிவர்களுடைய நிலம். John the Baptist's head. ஸ்நாபக அருளப்பருடைய தலை. எனவரும். பலபொருட்களோவொரு பெயர்ச்சொல்லுக்கும் (Respectively) வெவ்வேறாய்ச் சொந்தமென்றதா லிடைக்குறையுடையாளரும் -ச- என்று மெழுத்து மொவ்வொன்றோடும் வைக்கப்படும். உ-ம். John's, Thomas's and Henry's estate. அருளப்பனுடையவுந் தோமாசுடையவும் என்றியுடையவும் நிலம். எனவரும். இது அருளப்பனுடைய நிலம். தோமாசுடைய நிலம். என்றியுடைய நிலம். என்றுபொருள்படும்.

உ-டு. ஒருவார்த்தையை விளக்கிக்காட்டுவதற்குப் பலசொற்கள் வந்துவரும் போது இடைக்குறையுடையாளரும் -ச- என்று மெழுத்தும் பெரும்பாலுமந்தப்பெயரோடு அவ்வருத்தினவார்த்தைபோடு வைக்கப்படும். உ-ம். We staid at Lord Ashley's, the ornament of his Country, and friend of every virtue. தன்தேசத்துக்கலங்காரனுஞ் சகலபுண்ணியங்களுக்குஞ் சிநேகிதனுமான அஷ்லியென்னும் பிரபுவின் வீட்டிலே தங்கினோம். எனவரும்.

[illegible] உடையவேற்றுமைக்குவழக்கமா யடுத்துப்பின்வரும்வார்த்தைகளுக்குமத்தியவசனத்தின்(Clause) ஒப்புதலைக் கவேண்டாது. இவ்வாறே: அவன்சொன்னதுபோலேகுடியானவனுடைய சற்குணமானபுத்தியைப்புகழத்தொடங்கினாள். என்பதற்கு. She began to extol the farmer's, as she called him, excellent understanding. என்னைக்காமல். She began to extol the excellent understanding of the farmer, as she called him. என்னைக்கவேண்டும்.

[illegible] ஒப்புமையாகிலும் விசேஷமான(Emphasis) சொல்லுகிறதையென்கிலும் பிரயோகிக்கவேண்டியபோது - அல்லது(உடையவேற்றுமையிலிருக்கவேண்டிய) பலபெயர்ச்சொற்களுக்கிடையிலே வேறேவார்த்தைகள்வரும்போது - இடைக்குறையடையாளமும் - s - என்னுமெழுத்தும் ஒவ்வொருபெயர்ச்சொல்லோடும் வைக்கப்படும். உ-ம். They are James's as well as Mary's drawings. அவைகள்மரியம்மாளுடைய சித்திரப்படங்களாயிருக்கிறதுபோல் அருளாயியுடையவுஞ்சித்திரப்படங்களாம். He had the physician's, the surgeon's and apothecary's assistance. வைத்தியனுடையவுஞ்சத்திரவைத்தியனுடைய

வும்-மருந்து வியாபாரியுடைய் வுருதவியவனு க்குண்டாயிருந்தது-என்வரும்.

௩-து உடையவேற்றுமைக்குப்பதிலாய்-of-என்பதோடு பொருள்வேற்றுமையைப்பிரயோகிக்கலாம். உ-ம். புலவனுடையபுத்தியென்பதற்கு. The poet's genius அல்லது The genius of the poet என்வைக்கலாம். மனிதரைக்குறித்தாவது மனிதரைப்போலேயெண்ணப்படுகிற வுயிரில்லாத வஸ்துக்களைக்குறித்தாவது பேசும்போது பெரும்பாலும் Possessive என்னுமுடைய்வேற்றுமையிரயோகிக்கப்படும் வேறேவஸ்துக்களை விளக்கிக்காட்டுகிற பெயர்ச்சொற்களோடு-of- என்னுருபையுடைய்பொருள் வேற்றுமையிரயோகிக்கப்படும். உ-ம். The rider's skill. மாவுத்தனுடைய கெட்டிக்காரத்தனம். The speed of the horse. குதிரையின்வேகம்-என்வரும்.

(A) மேற்சொன்னபிரகாரம் பெரும்பாலுமுயிருள்ள வஸ்துக்களைக்காட்டுகிற பெயர்ச்சொற்களோடுமாத்திரம்-Possessive-என்னுமுடையவேற்றுமையைவைக்கிறதாலும்,முயிரில்லாதவஸ்துக்களோடேயுஞ்சிலவிசைவழங்கும். உ-ம். In a month's time we shall have grapes. ஒருமாதத்துக்குள்ளாகமுந்திரிகைப்பழம் வரும். It is a stone's throw from my house. அது என்வீட்டிலிருந்து-ஒருகல்லெறிதூரம்-என்வரும்.

(B.) ஒ குறிச்சொல்லுக்குமுன்-The-என்பதை வைப்பதால் தமிழிற் பன்மைப்பெயர்ச்சொல்லாகும். இந்தப்பன்மைப்பெயர்ச்சொல்லை உடையவேற்றுமையில் வைக்கவேணுமானால் தோடு-of-என்பதை வைக்கவேணுமே தவிர் இடைக்குறையடையாளமும்-S-என்னு மெழுத்தும் வைக்கவொண்ணாது. உ-ம்.... Virtuous-புண்ணியமுள்ள. The virtuous. புண்ணியவான்கள். என வரும். புண்ணியவான்களுடைய நடக்கையானது சர்வேசுரனுக்குப்பிரியமானது. The conduct of the virtuous is pleasing to God. என வரும். இதில் The virtuous' conduct-என்று சொல்லவொண்ணாது.

☞ இவ்விரு-உருபுகளிலேதாகிலுமொரு வசனத்திலடிக்கடி வரத்தகாது; மேலும் For the sake of conscience மனச்சாட்சிக்காக. For the sake of elegance சிறப்புக்காக வென்பவைகளுக்குப்பதிலாய். For con-science' sake, for elegance' sake-என்றுமிவைகளுக்கொற்றவாக்கியங்களையும் வைக்கத்தகாதென்றறிக.

சூ-ம். ஓர்வசனத்திற்சொல்லப்பட்ட காரியங்களைப்பார்க்கச்சொந்தக்காரன் வதிகங்கொண்டிருக்கிறனென்றர்த்தங்கொள்ளும்போது-Of-என்பதோடு—(The possessive) உடையவேற்றுமையை

யும் பிரயோகிக்கலாம். உ-ம். அது என் சகோத
ரனுடைய புத்தகங்களிலொன்று - என்பதற்
கு - That book is one of my brother's. என்வரு
ம். இது It is one book of my brother's books - எ
ன்பதுக்கொக்கும்.

எ-ம். உடைய வேற்றுமையுள்ள வசன
ங்களிற்கடைசிவார்த்தைபலமுறையுள்
ளடங்கியிருக்கும். உ-ம். He went to St. James's
என்பது to St. James's place அர்ச். இயாகப்
பருடைய வர்ணமனைக்குப்போனான் என்வரு
ம். அன்றியும் I am going to the tailor's தைய
ல்க்காரன் வீட்டுக்கு அல்லது அறைக்குப்போ
கிறேன். I bought this book at Turchy the
book seller's. புத்தகம் விற்கிறவனான டர்ச்சி
யென்பவனுடைய கடையில் அல்லது வீட்டி
லிந்தப்புத்தகத்தை விலைக்கு வாங்கினே
ன். We dine to-day at my sister's. இன்றைக்
கு மத்தியானத்துக்கு என் அக்காள் வீட்டி
ற் சாப்பிடுவோம் - என்வரும். இவ்வசனங்
களிலுடைய வேற்றுமைக்குப்பின் வருத்
தக்கதக்கதுபோலே. House, Apart-
ment அல்லது shop முதலான வார்த்தைகளு
ள்ளடங்கியிருக்கின்றன.

அ-ம். Participial phrase எச்சவசனம் அல்
லது Verbal noun வினைத்தொகையானது ப
லமுறையிற்றின் பெயர்ச்சொல்லுக்குப்பதி
லாய் வைக்கப்படும். உ-ம். Owing to the letter's

not being received. காகிதம் வந்து சேராத நிமித்தம்-என வரும்.

# எட்குருதிராம

குறியாச்சார்புச் சொல்லானது-ஒருமைப் பெயர்ச் சொற்களோடுமாத்திரம்பிரயோகிக்கப்படும். உ-ம். A man ஒரு மனிதன். An ox. ஓரெருது-என வரும். குறிக்குச்சார்புச்சொல்லானது-இரண்டெண்களுக்குமுன்னும்வழங்கும். உ-ம். The tree மரம் The trees மரங்கள் என வரும்.

## விபரீத விதி

ஆகிலும்பன்மைப்பெயர்ச்சொற்களுக்குமுன் வருஞ் சில-எண்ணுரிச்சொற்களும்-Few-சில-Great many-அநேகாநேகம் என்பவைகளுங் குறியாச்சார்புச்சொல்லு(நங்களுக்குமுன்) வரக்கேட்கும். உ-ம். A hundred sheep. நூறு செம்மறியாடு. A few soldiers. சில சேவகர். A great many boys. அநேகம் பிள்ளைகள்-என வரும்.

## இறப்புசகுதிராங்கள

ஷ வுச ஓர்பெயர்ச்சொல்லானது வெவ்வேறு

ன் வஸ்துக்களுள்ளவோர்சாதியை(முழுதும்) காட்டும்போதுகுறிக்கிற்சார்புச்சொல்லை-(அதற்குமுன்) வைக்கவேண்டும். உ-ம். The lion is the strongest of animals. சிங்கமானது மிருகங்களிற்பெலனுள்ளதாம்-என்வரும். ஆனாலது வெவ்வேறான வஸ்துக்களடங்காதவோர்சாதியைக்குறிக்கும்போது சார்புச்சொல்லை(அதற்குமுன்) வைக்கவொண்ணாது. உ-ம். Gold is precious. தங்கமானது விலையேறப்பெற்றதாம். Wheat is dear. கோதும்பைகிறுக்கியாயிருக்கின்றது-எனவரும். ஆகிலுமின்னம்வயலிலிருக்கிற கருதைக்குறித்துப்பேசும்போது. The rice is green. நெல்லுமுத்தவில்லை. The wheat is blighted. கோதும்பைசாவியாய்ப்-போனது-என்வரும்.

ஆகிலும் Man மனிதனென்பது வெவ்வேறான வஸ்துக்களுள்ள சாதியைகுறித்தாலுஞ் சார்புச்சொல்லை வரக்கேட்காது. உ-ம். Man is born to trouble. மனிதன் தொல்லைப்படப்பிறந்திருக்கிறான்-என்வரும்.

உவது. விசேஷமான(arts) கல்விகள்(sciences) சாஸ்திரங்கள்(Titles) பட்டப்பெயர்கள் முதலியவைகளை(காட்டும) பெயர்ச்சொற்களுக்குமுன்சார்புச்சொல்லை வைக்கவொண்ணாது. உ-ம். Printing is a wonderful art. அச்சானது ஆச்சரியத்துக்குரிய கல்வியாம்-என்வரும். ஆனால் (Physics தத்துவசாஸ்திரக்

தவிர்) பல கல்வி-சாஸ்திரம்-பட்டப் பெயர்கள் முதலியவைகளையடக்கிக் கொள்ளுகிற சில பெயர்ச்சொற்கள் சார்புச்சொல்லை (தங்களுக்குமுன்) வரக்கேட்கும். உ-ம். The Mathematics. உயர்கணித சாஸ்திரம். The fine arts. விசித்திரம்-என வரும்.

௯௫-வது. இரண்டு முதற் பல உரிச்சொற்கள் ஒரே யாளையல்லது ஒரே வஸ்துவைக் குறிக்கும்போது (அதுகளில்) முந்தினதுக்கு முன்னே மாத்திரஞ் சார்புச்சொல்லை வைக்கவேண்டும். உ-ம். An affectionate, intelligent and prudent wife is invaluable. பட்சமும் புத்தியும் விவேகமுள்ள பத்தினியானவள் விலைமதிக்கப்படாதவளாம்-என வரும். ஆறு வைகள் வெவ்வேறு ஆட்களை அல்லது வெவ்வேறு வஸ்துக்களைக் குறித்தால் ஒவ்வொன்றுக்கு முன்னுஞ் சார்புச்சொல்லை வைக்கவேண்டும். உ-ம். An amiable and an intelligent friend are both worthy of regard. நேசத்துக்குரியவனும் புத்தியுள்ளவனுமான இவ்விரு சிநேகிதருஞ் சங்கைக்குப் பாத்திரவான்களாம். என வரும்.

௬-வது. இரண்டு முதற் பல பெயர்ச்சொற்கள் ஒரே யாளையல்லது ஒரே வஸ்துவைக் குறிக்கும்போது சார்புச்சொல்லானது முந்தினதுக்கு மாத்திரம் வழங்கும். உ-ம். Caesar the Consul and Dictator was killed in the Senate. சங்கத்துத் தலைவனும் திகாரியுமான சீசரென

பவன்சங்கத்திலேதானே கொல்லப்பட்டான்-எனவரும். ஆனாலவைகள் வெவ்வேறாட்களாயல்லது வெவ்வேறுவஸ்துக்களைக்குறித்தால் (அவைகளில்) ஒவ்வொன்றுக்குமுன்னுஞ்சார்புச்சொல் வைக்கப்படும். உ-ம். The Duke of Newcastle, the Commander of the Forces and the Secretary at War, were all to blame. நியுக்காஸ்ட்லென்னும்பட்டத்துப்பிரபுவும் படைத்தலைவருஞ் சண்டையின்சம்பிரதியுமாகிய வெல்லாரும்-நிந்தைக்குப்பாத்திரவாளர்களாம்-எனவரும்.

ரு-வது. இரண்டுமுதற்பலபெயர்ச்சொற்கள் ஒரேயாளையல்லது ஒரேவஸ்துவைக்குறித்து ஒப்பனையுரிக்குப்பின் வந்தால் சார்புச்சொல்லானது முந்தின பெயர்ச்சொல்லுக்குமுன்னேமாத்திரம் வழங்கும். உ-ம். He is a better singer than dancer. அவனாடுகிறதினும் பாடுகிறதில் கெட்டி-எனவரும். ஆனாலவைகள் வெவ்வேறு ஆட்களாயல்லது வஸ்துக்களைக்குறிக்கும்போது சார்புச்சொல் ஒவ்வொன்றுக்குமுன்னும் வைக்கப்படும். உ-ம். He is a better statesman than a soldier. அவனொருசேவகனைப்பார்க்கிலுந்தேசப்பிரமாணிகனாம் என்பது He is a better statesman than a soldier would be. ஒருசேவகன் (தன்சேவகத்தைச்செய்வதைவிட) அவன் தேசப்பிரமாணங்களைக்குறித்து

திருக்கிறன்-எனவரும்.

௬ஆவது. பெயர்ச்சொற்கள் தொடர்ந்துவரும்போது சிலதுகள்-a-என்பதையுஞ் சிலதுகள்-an-என்பதையும் வர்க்கேட்குமாகில் ஒவ்வொன்றுக்குமுன்னேயுஞ் சார்புச்சொல்லை வைக்கவேண்டும். உ-ம். ஒருபிரபுவும் ஒரு அதிபதியும் ஒருபிரதானியுங் கூடவிருந்தார்கள்- என்பதற்கு- a duke, an earl and a marquis, were present- என்றுசொல்லவேணுமேயொழிய- a duke, earl and marquis-என்றுசொல்லொண்ணாது.

௭ஆவது. குறிகிலிச்சார்புச்சொல்லானது சிலமுறை சொந்தச்சொல்லுக்குப்பதிலாக வழங்கும். உ-ம். He has a pain in the head அவனுக்குத்தன் தலையிலே நோவுண்டு-எனவரும்.

௮ஆவது. குறியாச்சார்புச்சொல்லானது பெரும்பாலும் உரிச்சொற்களுக்குமுன்வரும் ஆனால். such-இப்பேர்ப்பட்ட. many-அநேகமென்கிற உரிச்சொற்களுக்குப்பின்னும் so-மிகசமமாய் அல்லது மெத்த-as-அப்படிபோல். How-எப்படிமுதலியவைகளை முன்கொண்டிருக்கிற உரிச்சொற்களுக்குப்பின்னும் வரும். உ-ம். Such a storm. இப்பேர்ப்பட்ட புசல். What a favor. எவ்வளவுபெரிய தயவு. It is too flattering a compliment. இது மெத்தவும் பசப்புகிற புகட்சியாம்.

ர்வரும். குறிகைச்சார்புச் சொல்லானது சகல - என்பதுதவிர மற்றச்சகலவுரிச்சொற்களுக்குமுன் வரும். உ-ம். The good man is secure, but except him all the world is in danger. நல்லமனிதனுக்கு மோசமில்லை, ஆனாலவன் தவிர்ச் சகலரும்பாயத்துக்குள்ளாகவிருக்கிறார்கள் - என வரும்.

கவனம். Few - சில. Little - சின்ன. Slight சொற்பமான முதலிய வுரிகளுக்குமிதற்றோற்ற வார்த்தைகளுக்குமுன்னே குறியாச்சார்புச்சொல்லை வைக்கும்போது அருத்தத்தில்மறை விகாரப்படும். உ-ம். He has little money. அவனுக்கு (எப்போதும்) கொஞ்சம் பணந்தானுண்டு. He has a little money. அவனுக்கு (இப்போது கையிலே) கொஞ்சம் பணந்தானிருக்கின்றது - என வரும்.

யவது. சார்புச் சொல்லையும் பெயர்ச்சொல்லோடு சேர்ந்த வுரிச்சொல்லையும் பிரயோகிப்பதில் மகா வெச்சரிக்கையாயிருக்கவேண்டும். The two men. இரண்டு மனிதரும். Both the men. இரண்டு மனிதரும் - என்று சொல்லலாம். ஆனால் The both men அல்லது Two the men - என்று சொல்லவொண்ணாது. அன்றியும் Half a rupee அரைரூபாய். A half rupee. ஒற்றையரைரூபாய் என்னுமிவ்விரண்டு வசனங்களும் நல்லது தான். ஆனால் அருத்தம் விபரீதமாம் - என வரும்.

## அ௲ ஸூத்திரம

ஒவ்வொரு-உரிச்சொல்லும் (adjective
pronoun) ஒவ்வொருபண்புச்சொல்லும்(Ex
-pressed) விரிந்தாகிலும் (Understood) தொ
க்காகிலுமிருக்கிற பெயர்ச்சொல் அல்ல
வது பெயர்ச்சொல்லுக்குச்சரியான (Claus
வசனத்திருப்பையாவது காட்டியத்(
டு- எண்ணிலப் பொருந்த வேண்டும். உ-ம். The
good men are happy. அந்த நல்லமனித
கள் பாக்கியவான்கள். That poor man i
Contented. அந்த வெளியவன் மனத்திருப்
தியுள்ளவனும்-என்வரும்.

விவரம். இப்பேர்ப்பட்டமுறைப்பாட்
க்குஅவன் விரோதஞ் செய்தது ஆச்சரி
மாயிருக்கின்றது-என்பதற்கு. That he
should have resisted such an appeal i
strange. என்வரும். இதில்-strange-ஆச்
ரியமான வென்கிற வுரிச்சொல் That he shou
have resisted. அவன் விரோதஞ் செய்தா
னென்பதோடு பொருந்துகின்றது.

## சிறப்புச் சூத்திரங்கள்

௧ ஸூ. பெயர்ச்சொல்லின் திருகு
விசேஷணச்சொல் ...

ர்டிருக்கிற்வுரிச்சொல் (absolute) நேர்மான
ம்ற் வுரிச்சொல்லென்று சொல்லப்படும்
ம்: The wise are truly great. ஞானிகள்
மெய்யாகவே பெரியவர்கள் என்வரும்.
உதா. (ஒரேயுரிச்சொல்லோடு) இரண்டோ
பலவுரியாவது-இரண்டு மேன்மையுரிவை
து வைக்கவொண்ணாது. இவ்வாறே:
wiser அல்லது more wise அதிகயுத்திய
ள. wisest அல்லது most wise மகாயுக்தி
ன்ள- என்று சொல்லவேண்டியதேத
ன் more wiser, most wisest என்றுசொ
லவொண்ணாது. அன்றியும் Complete
- universal- சாதாரணமான- என்பவை
வைப் போலவே யொப்பவை மேன்மையுரிவை
பெருதலில் வுரிச்சொற்களை யொப்ப
ர்- மேன்மையுரியிலொருக்காலும் வைக்
க்ககூடாது. இவ்வாறே: more complete,
more universal, most complete, most uni-
versal- என்று ஒப்பவை மேன்மையுரியில்
வைக்கக்கூடாது- ஆகிலும், மிகுதியிலிருந்த -ன
மறைந்து Lesser- என்னும் வார்த்தையை
பெயர் பெற் ...ந்தியர்கு தலாய்ப்பிரி
யோகிக்கிறார்கள்- என்வறிக.
உதா. Each, every- ஒவ்வொரு. Either- இர
ரிடத்தொன்று Either இரண்டிலொன்று
ல் இ- எச்சம... கள் வினாச்சொல் இ
யொருமையில் வாக்கேட்கும் உதா. Each witness

gives a different statement. ஒவ்வொருசா-
சியும் விபரீதமான வாக்குமூலங்கொடுக்
குன் - என வரும். None ஒருவருமில்லை - என்ப
து - no one - என்பதோடு புணர்ந்த மொழி
யாகையால் ஒருமை யென்பதற்குச் சக்
கேதமில்லை. அதினிமித்தம் வினைச்சொ
ல்லை யொருமையில் வரக்கேட்கும். உ-ம்.
There is none in the house. வீட்டிலொரு
வருமில்லை என்வரும்.

௪௨௯. Either - இவ்விருவரிலொருவன்
Neither - இருவரிலொருவனுமில்லை - என்
பவைகளிரண்டு பொருள்மாத்திரங்
காட்டுவதால் - இரண்டுக்கு மேல்பட்
ட பொருளோடிவைகளைப் பிரயோகிக்
க்கவொண்ணாது. உ-ம். Either of the two
will suit? அவ்விருவரிலொருவன் (அ
துக்கு) ச்சரிப்படுவான் - என்வரும். ஆ
றுல் மூவரில் - ஒருவனென்பதற்கு - Either
of the three - என்று சொல்லவொண்ணா
து ——...

* (A) இரண்டு பொருளுக்குமேல் அதி
கவஸ்துக்களைக்குறித்துப் பேசும்போ
து - எதிர்மறையிருந்தால் - none - என்
பதையும் - எதிர்மறையில்லாவிட்டால்
one - என்பதையும் வைக்கவேண்டும்.
உ-ம். One of the three seized upon me.
அம்மூவரில் - ஒருவ—— . . ——ன்

என்னைப் பிடிக்கிறான். None of the four bears with your bad temper. அந்நாலுபேயரிலொருவனு முன் கெட்ட குணத்தைச் சகிக்கிறதில்லை - என்வரும்

௫-வது. இரண்டு வஸ்துக்களுக்குள்ளே மாத்திரம். ஒப்பனையிடும்போது. ஒப்பனையுரியும். இரண்டுக்குமேலதிக வஸ்துக்களோடே. ஒப்பனையிடும்போது மேன்மையுரியும் வழங்கும். உ-ம். He is the braver soldier of the two. அவ்விருவரிலிவன் தான் அதிக தைரியமுள்ள சேவகன். This is the bravest soldier in the army. இவன்றான் படையிலுள்ள சேவகரில் மகாதைரியமுள்ள சேவகன் - என்வரும்

௬-வது. (Class) ஓர் வகுப்பிலுள்ளவொரு பொருளையவ் வகுப்பிலுள்ள மற்றப் பொருட்களோடு - ஒப்பனையிடும் போது மேன்மையுரியாகிலும் - other - என்பதோடு - ஒப்பனையுரியாகிலும் பிரயோகிக்கப்படலாம். உ-ம். ஸலோமோன் சகலமனிதரிலுந் திகஞானி - என்பதற்கு. Solomon was the wisest of all men அல்லது Solomon was wiser than all other men என்று சொல்லலாம்.

[illegible] தமிழிற் சமையங்களிற் குறைநிலைச் சார்புச் சொல்லுக்குப் பதிலாய்க் குறியாச் சார்புச் சொல்லை வைக்காதபடிக்கு ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். உ-ம். அவன்

மனிதரில் அதிக ஞானி என்பதற்கு. He was the wisest of men என்று சொல்லவேண்டுமேயொழிய He was a wisest of men என்று சொல்லவொண்ணாது.

பலவருப்புகளாவது அல்லது ஒரேவகுப்பிலுள்ள பல வஸ்துக்களாவது ஒப்பனையிடப்படும்போது ஒப்பனையுரியை வைக்கவேண்டும். உ-ம். Jane is taller than her sisters. ஜேனாயி தன் சகோதரிகளைப்பார்க்க உயரமானவள் என வரும்.

எழுது ஒப்பனையுரியானது (opposition) எதிரிடையென்றதைக் கொள்ளும்போது Than என்பதையும் (selection) தெரிந்துகொள்ளுதலென்றதைக் கொள்ளும்போது of என்பதையுந் தனக்குப்பின் வரக் கேட்கும். அருவ such இப்பேர்ப்பட்ட என்பது as போல என்பதைத் தனக்குப்பின் வரக் கேட்கும். உ-ம். Peter is a wiser man than Thomas. தோமாவைப்பார்க்க இராயப்பன் அதிக விவேகமுள்ள மனிதன். Peter is the wiser of the two. அவ்விருவரில் இராயப்பன் அதிக விவேகி. Such men as he are happy. அவனைப்போலிருக்கிற மனிதர் பாக்கியவான்கள் என வரும்.

அளவு (Dimension) அளவைக் காட்டுகிற சொற்களைப்போதும் [illegible] நாமங்கள் சாரும் பெயர்ச்சொற்களுக்குப்பின் வரும். உ-ம். My

fishing rod is twelve feet long. என் தூண்டிற் கழி பன்னிரண்டடி நீளமாம். எனவரும்.

கூ௯. This இது. Those அவர்கள் அவைகள் அல்லது One ஒன்று. Other வேறொன்று அல்லது Former முந்தினது. Latter பிந்தினது. இவைகள் முன் குறித்துப் பேசப்பட்ட விரண்டு வஸ்துக்களைக் காட்டும் போது This, one, latter. இம்மூன்றும் பின்னரானது சொல்லப்பட்டதையும் That, other, former, இம்மூன்றும் முந்தவானது சொல்லப்பட்டதையுங் குறிக்கும். உ-ம். Wealth and poverty are both temptations; that tends to excite pride, this, discontentment. ஆஸ்தியுந் தாரித்திரமுமிவ்விரண்டுஞ் சோதினைக் கேதுவானதுகள் தான்; அது ஆங்காரத்தையுமிது சஞ்சலத்தையும் வருவிக்க வேதுவாயிருக்கின்றது. James and John are good scholars; the one always behaves well; the other is at the head of his class. இயாகப்பனும் அருளப்பனும் நல்லமாணாக்கராம் அருளப்பன் எப்போதும் நன்றாய் நடக்கிறான், இயாகப்பன் தன் கிளாசிலே முதலாயிருக்கிறான். Virtue and vice are contrary to each other; the former is beneficial to man, the latter is hurtful to him. புண்ணியம்பாவங்களிரண்டு மொன்றுக்கொன்று விரோதமானவைகளாம்; புண்ணியமானது

மனிதனுக்குப் பிரயோசனமுள்ளது அர்க்குணமோவென்றால் அவனுக்கு மோசமுள்ளது. என்வரும்.

௰வது. First-முதல். Last-கடைசியான் என்றுமிவ்விரு சொற்களோடெண்ணுரிச்சொற்கள் வரும்போது. எதைமுன்னும்-எதைப்பின்னும் வைக்கவேணுமென்றிலக்கணதாவோர்க்குள் வெகு தர்க்கமுண்டாயிற்று. இவ்வாறே: யூக்ளிடென்பவனுடைய முதல் மூன்று புத்தகமென்பதற்கு-The first three books of Euclid-என்றுசொல்லவேணுமோ. The three first books of Euclid என்றுசொல்லவேணுமோ? கவியின்கடைசியான பத்துவரிகள்-என்பதற்கு-The last ten lines of the Poem-என்றுசொல்லவேணுமோ The ten last lines of the Poem-என்றுசொல்லவேணுமோவென்று தர்க்கமுண்டாயிற்று. ஆனால் மேலான வாசிரியர்கள் தங்கள் புத்தகங்களிலிவ்விருவிதமாயும் வைத்திருப்பதாலெப்படி வைத்தாலும் பிழையல்லவென்றறிக.

## ௧௨ம் அதிகாரம

பெயருக்கும்பின்றிச் சொற்கள் தாங்கள்

சாரும் பெயர்ச்சொற்களோடேயாவிலும் - எண்ணிலும் இடத்திலும் பொருந்தும். உ-ம். The river is swollen. ஆறு பெருகிப்போயிற்று. It overflows its banks. அது கரைகடந்தோடுகின்றது. The boys have lost their books. பிள்ளைகள் தங்கள் புத்தகங்களைப் போக்கடித்தார்கள் - என்வரும்.

## இறைபடுசகுதிர்வகள

கூஎ. மிகவுமழுத்திச்சொல்லவேண்டிய போது பெயர்ச்சொல்லும் பெயருக்குப்பிரதிச்சொல்லும் - ஒரே வினைக்கெழுவாயாக வரலாம். உ-ம். wisdom, that is the principal thing. ஞானமோ - அதுவேபிரதானகாரியமாம். The Lord, he is God. ஆண்டவரோவென்றால் அவரே சர்வேசுரன் - என்வரும். ஆனால் (solemn) மேலான வித்தியாசங்களில் மாத்திரம் வழங்குமென்க் கொள்க.

உஎ. It - என்னும் பெயருக்குப்பிரதிச்சொல்லானது பன்மை வசனத்திலோர் பங்கையாவது - எவ்வித பாலிலும் - எண்ணிலும் - இடத்திலும் உள்ள பெயர்ச்சொற்களையாவது பெயருக்குப்பிரதிச்சொற்களையாவது குறிக்கப்பிரயோகிக்கப்படும். உ-ம். It is he. இவன்தான். It is these fetters that vex me. இந்த விலங்குகள்தான் - என்னைவரு

த்தப்படுத்துகின்றனர். It is a Christian's duty to love his enemies. தன் சத்துருக்களைச் சிநேகிப்பதே கிறிஸ்துவனுடைய கடைமையாம். ( See also Note 4, under rule I.) It-என்பது அநேக சமயங்களிற் பிரயோகிக்கப்படுவதுமன்றிப் பல்முறை (indefinite)-பொதுவான பொருளாயுந் தரும். உ-ம். During this time they had lorded it over the land with absolute sway. இதற்குள்ளாக அவர்கள் முழு அதிகாரத்தோடு பூமியிலே கொடுங்கோன்மை செலுத்தினார்கள்-என்பவரும். இதில்-it என்பதொரு பொருளாயுங் குறிப்பதில்லையென்றறிக.

௧௨ஆம். இரண்டு அல்லது பல வேறுவாய்கள்-And-என்பதனாலிணைந்து வரும்போது-அவைகளுக்குப்பதிலாக வைக்கப்படுகிற பெயருக்குப்பிரதிச் சொல் பன்மையிலிருக்க வேண்டும். உ-ம். He and I have settled the matter and we shall not again disturb it. அவனும் நானுமத் தக்காரியத்தையொழுங்குப்படுத்தியாயிற்று-திரும்ப அதைத் தாறுமாறுக்க மாட்டோம்-என்பவரும். ஆறுலவைகள் பிரிக்குங் கூட்டிடைச்சொல்லால் சேர்க்கப்படும்போது பெயருக்குப்பிரதிச் சொல்-ஒருமையிலிருக்க வேண்டும். உ-ம். Neither the master nor the scholar minds his duty. உபாத்தியாயினும் மாணாக்கனென்

கிறுக்தன் கடமையைக் கவனிக்கிறதில்லை என்வரும். ஆறுவது இலொழுங்கையல் வெவ்வேறுவாய்கள் சேர்க்கைப் பொருளாகத்தால் ப்பெயருக்குப்பிரதிச்சொல் பன்மையில் வரும். உம். Neither he nor I was gratified by the attentions we received. அவனாகிலும் நானாகிலும் நாங்கள் பெற்றுக்கொண்ட மேன்மரியாதை நிமித்தஞ் சந்தோஷப்படவில்லை என்வரும்.

௫வது பெயருக்குப்பிரதிச்சொல்லானது கூட்டப்பெயருக்குப்பதிலாயிருக்கும் போது அது ஒருமையிலாகிலும் பன்மையிலெனிலும் வரலாம். அது ஒரே வசனத்தில் ஒருமையிலும் பன்மையிலும் வரவொண்ணாது. உம். The parliament manifested its intention to the King. ஆலோசனைச் சங்கமானது தன் கருத்தை இராசாவுக்கு வெளிப்படுத்தினது. The people will not give-up their obstinacy. சனங்கள் தங்கள் மூர்க்கத்தை விட்டுவிடமாட்டார்கள் என்வரும்.

௬வது இராசாக்களும் புத்தகங்களைப் பிரசித்தப்படுத்துகிறவர்களும் பெயருக்குப்பிரதிச்சொல்லை யொருமை முதலிடத்தில் வைப்பதற்குப்பதிலாகப் பெரும்பாலும் பன்மையில் வைப்பதே வழக்கம். உம். We charge you, on allegiance to ourself.

கடைக்குக்கிட்டிப்படியவன் பேரிலுள்ள கடமையைக் குறித்தனைக்குக் கற்பிக்கிறோம். We cheerfully admit his communication but do not hold ourself responsible. அவன்சொன்ன சங்கதியைச் சந்தோஷமாயேற்றுக்கொள்ளுகிறோம். ஆனால் அதுக்கு நாமுத்தரவாதியாகிறதில்லை-என்வரும்.

# யஃசூதிரம

சம்பந்தச்சொல்லானது தன் (Antecedent) முன்மொழியோபொலிலும்-எண்ணிலும்-இடத்திலும் பொருந்தும். உ-ம். I who read. வாசிக்கிற நான். The ship which sails. யாத்திரைபண்ணுகிற கப்பல். The virtue which I love. நான் நேசிக்கிற புண்ணியம்-என்வரும்.

## சிறப்புச் சூத்திரங்கள்

ஊ-வது Who-என்பது மனிதருக்கும்-which என்பது குழந்தைகளுக்கும்-மிருகங்களுக்கும் உயிரில்லாத வஸ்துக்களுக்கும் பிரயோகிக்கப்படும். வினாச்சொல்லாக வரும் who என்பதுக்கும்-all-சகல-same-. தானே என்கிற வார்ச்சொற்களுக்கும்-ஒருமையி

வாகிலும் பன்மையிலென்கிலும் வருகிற-per-
-son. ஆள்-Thing- வஸ்துவென்கிற இவ்விர
ண்டு பெயர்ச்சொற்களுக்கும்-மேன்மை
யிருக்குப்பின்-That என்பது வைக்கப்ப
டும். அன்றியும்-இரண்டுமுதற்பலமுன்மொ
ழிகள் சேர்ந்து வரும்போதவைகளில்-ஒ
ன்று- who- என்பதையுமற்றொன்று-which
என்பதையுங் கேட்குமாகில் அப்போதுமே
who-which- என்பதுக்குப்பதிலாய்-That -எ
ன்பதை வைக்கவேண்டும். 2ம். The man who
works. வேலைசெய்கிறமனிதன். The infants
which cry. அழுகிற குழந்தைகள். The hare
which runs. ஓடுகிறமுயல் The plant which
buds. துளிர்விடுகிற பூண்டு. Who is the - man
that speaks to you. உன்னோடுபேசுகிறமனி
தனார். I forgot all that I learned last year.
போன வருஷம் நான்படித்ததெல்லாமற
ந்துபோனேன். The same man that I saw
yesterday, is come today நேற்றுநான்பார்
த்தமனிதன்றானே யின்றைக்கு வந்திருக்
கிறான். The person that breaks his words
is not worthy of trust. தன் வார்த்தைக்கி
ரண்டகம்பண்ணுகிறவன் நம்பிக்கையற்ற
வனாம். The thing that I took in consider-
-ation. நான் யோசிக்கத்துவக்கின காரி
யம். The Teak is one of the strongests trees
that are in the world. தேக்குமரமானதுஉ

மேலாகத்திலிருக்கிற கொட்டையானமரங்களி லொன்றும். The merchants and the wagons that we met on the road. வழியிலேநாம்கண்ட வர்த்தகரும் வண்டிகளும் - என வரும்.

௨௮௬. வசனத்தின் - ஒர் - உருப்பானதுமு ன் மொழியாயிருக்கும்போது which - என்கிற வுரிச்சொல் பிரயோகிக்கப்படும். உ-ம். He dis-likes trifles, which I am glad to hear. அவ ன் வீண்காரியங்களை வெறுத்துத்தள்ளுகி றான் - இதைக்கேட்டுச் சந்தோஷப்படுகிறே ன் - என வரும்.

௨௮௭. கூட்டப்பெயர்கள் - மனிதரைக்கு றித்தாலும் - which - அல்லது That - என்பதை வாக்கேட்கும். உ-ம். The faction which had long prevailed, was overthrown. வெகுகால மாய்ச்செயங்கொண்டுவந்த கட்சியானது தோற்றுப்போயிற்று - என வரும்.

௨௮௮. சம்பந்தச்சொல்லுக்கும் வினைக் கும் நடுவே யெழுவாய் வாராதபோது சம்பந் தச்சொல் வினைக்கெழுவாயாகும். உ-ம். The boy who bought the book, is gone. புத்தகத்தைவி லைக்கு வாங்கின பையன் போய்விட்டான் - என வரும். - ஆனால் வைகளுக்கு நடுவே யோரெழு வாய் வந்தாலச்சம்பந்தச் சொல்லுக்குமுன் னுள்ள முன்னிடைச்சொல்லாவது - அது க்குப்பின்னுள்ள வினைச்சொல்லாவது அந் தச்சம்பந்தச்சொல் ஐ (Objective) பொருள்வே

ற்றுமையில் வரக்கேட்டோம். உ-ம். The boy whom you sent for is come. நீர் வரச்சொன்ன பையன் வந்திருக்கிறான் - என வரும்.

அன்றியும் பலமுறை சம்பந்தச்சொல்லுக்குப்பின் வரும் பெயர்ச்சொல்லானது - அதை - உடைய வேற்றுமையிற் கேட்பதேவழக்கம். உ-ம். Do not trust him whose promises have often been broken. அடிக்கடி தன்சொல்லுக்கிரண்டகம்பண்ணினவனை நம்பாதே. என வரும்.

இது வெவ்வேறிடங்களிலுள்ளவிரு கருத்தாவேற்றுமைச்சொற்கள் சம்பந்தச்சொல்லுக்குமுன் வரும்போது வசனத்தின் அருத்தத்துக்குத்தக்கதாய்ப் போலே சரியான முன்மொழியெது வென்று பார்த்தறிய வேண்டும். உ-ம். I am the man who command அதாவது: I the commander am the man. கற்பிக்கிற நான் மனிதன்றானே - அல்லது I am the man who commands அதாவது: I am the commander. கற்பிக்கிற மனிதன் நானே யென்பதுக்கொக்கும்.

☞ கற்பிக்கிற - கேட்கிற முதலிய பெயரெச்சங்களுக்குப்பின்னுடனே தமிழில் வருஞ்சொல்லெதுவோ அதுவே சம்பந்தச்சொல்லுக்குச் சரியான முன்மொழியாம். ஆகையாற் சம்பந்தச்சொல் வந்தோடு பாலிலும் - எண்ணிலும். இடத்திலும் பொருந்து

ன்றும்

௪௨௬. முன்மொழியிரட்டித்து வரும்போது அல்லது-யாரென்று கேட்விகேட்கும் போது அல்லது சில்பெயருக்குள்-யாரென்றுசொல்லும் போது- who- என்பதுக்குப்பதிலாய்-which என்பதைப்பிரயோகிப்பதேமுறை. உ-ம். His former companion, which companion had deceived him. அவனையேய்த்துப்போட்டானேயந்தப்பழயதோழன். Which is the man அந்தமனிதனார். Which of them did it? அவர்களிலிதைச்செய்தவனார்-என்வரும்.

௭. சம்பந்தச்சொல்லானது கூடினமாத்திரந்தன்முன்மொழிக்கு அடுத்திருக்கவேண்டியது. உ-ம். I wished the officer, who arrested the man, to state the charge against him. அந்தமனிதனைப்பிடித்ததளவாயவனுக்குவிரோதமாய்க்குற்றஞ்சாட்டும்படியாய்க்கேட்டுக்கொண்டேன்-என்வரும்.

௮. சம்பந்தச்சொல்லான்துபலமுறைகெடும். உ-ம். I received the book you sent to me. நீரனுப்பியபுத்தகத்தை வாங்கிக்கொண்டேன்-என்வரும். (இதில். The book என்பதற்குப்பின்வரவேண்டிய-which-என்பது கெடுமை காண்க.) சிலமுறை படர்க்கையிடத்துமுன்மொழியுங்கெடும். உ-ம் Who will, may weep. மனதுள்ளவன் அழட்டும்-என்வரும்...

## யிசஃ. சூத்திரம

செய்வினைகள் ஐ வேற்றுமையைக் கேட்கும். உ-ம். I found him assisting them. அவன் அவர்களுக்குதவிசெய்கிறதைக் கண்டேன்-என வரும்.

---

## சிறப்புச் சூத்திரங்கள்

ஜுஃ. தன் வினைகள் (நங்களைப்போலே) ஒரே அருத்தமுள்ள (சொற்களை) நங்களுக்குப்பின் ஐ வேற்றுமையில் வரக்கேட்கும். உ-ம். He runs a race. பந்தயவோட்டமோடுகிறான்-என வரும். அன்றியும் Time காலம் Space தூரம் Value கிரயம் Measurement அளவு முதலியவைகளைக் காட்டுகிற பெயர்ச்சொற்கள் தன்வினைகளுக்குப்பின் வரும்போது (அது தன்வினையானாலும்) இவைகளை ஐ வேற்றுமையில் வரக்கேட்கும். உ-ம். He walked a mile. அவனொரு காதவழி நடந்தான்-என வரும்.

உஃ. To ask கேட்குதல் Deny மறுதலித்தல் Give, Grant கொடுத்தல் Offer ஒப்புக்கொடுத்தல் Pay செலுத்துதல் Promise வார்த்தைப்பாடு கொடுத்தல் Refuse இல்லையென்றுசொல்லுதல் Show காண்பித்தல் Teach படிப்பித்தல் Tell சொல்லுதல்-என்று பயன் தரும் வினை

கள் தங்களுப்பின்னிரண்டு ஐவேற்றுமைகளை வரக் கேட்கும். (இவ்விரு ஐவேற்றுமைகளில்) ஒன்று ஆளாயும் வேறொன்று பொருளாயுமிருக்கும். உ-ம். He showed me the letter. அவனெனக்குக் காகிதத்தைக் காண்பித்தான். He gave it me. அவனதை யெனக்குக் கொடுத்தான். என்வரும். மேற்சொல்லப்பட்ட வினைகளின் செயப்பாட்டு வினைமுதலாய் ஒரு ஐவேற்றுமையைக் கேட்கும். உ-ம். He was offered a high salary. அவனுயர்ந்த சம்பளத்தைப் பெற்றுக் கொண்டான். என் வரும்.

௩௨௯. செய்வினையின் செயப்படுபொருள் (அவ்வது ஐவேற்றுமை) பல்முறை வசனத்திலோர் பங்காயிருக்கும். உ-ம். I acknowledge that he is right. அவன் சொல்லுகிறது சரி யென் றேற்றுக் கொள்ளுகிறேன் - என் வரும்.

௩௩௰. சில வினைகள் செய்வினைகளாயுந் தன் வினைகளாயுமிருக்கும். உ-ம். The wheel turns. சக்கரஞ் சுற்றுகின்றது. He turns the wheel. அவன் சக்கரத்தைச் சுற்றுகிறான். என்வரும்.

௩௩௧. ing - என்பதை யீற்றிலுடைய நிகழ்காலப் பெயரெச்சமானது பல்முறை செயப்பாட்டு வினையின் பயனைத் தரும். உ-ம். The steam ship is now building. புகைக்கப்பலானிப்போது செய்யப்படுகின்றது - என்வரும்

சில விலக்கண-நூலோர் மேற் சொல்லப்பட்டவ ஏன்றதை-The steam ship is now being built அல்லது The steam ship is now a* building எனப்பிரயோகிக்க வேணுமென்று சொல்லுகிறார்கள்; ஆனால் இவ்விரு-உருபுகளில் முந்தினது அதிக சுருக்கமாயும்-உத்தம விலக்கணநூலோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுமாயிருக்கக்கொள்ள வதுவே நல்லதென்றறிக.

௬வது Fall-விழுதல் Lie கிடத்தல் Rise எழும்புதல் Sit உட்காருதல் முதலிய தன்வினைகளை யிவைகளுக்கொத்த Fell-விழத்தாட்டுதல் Lay போடுதல் Raise எழுப்புதல்-Set வைத்தல் முதலிய செய்வினைகளுக்குப்பதிலாய்ப் பிரயோகிக்கவொண்ணாது. உ-ம். மேசைமேலே கிடக்கின்றது-என்பதற்கு It lies on the table-என்று சொல்லவேண்டுமேயொழிய- It lays on the table. என்று சொல்லவொண்ணாது.

௭வது முன்னிடை வினைகளென்றுசொல்லப்பட்ட சில வினைகள் தங்கள்-தங்களுக்குரிய முன்னிடைச்சொற்களைப் பின்வரக் கேட்கும். உ-ம். He never swerves from the right path. அவனொருக்காலும் நேரான வழியை விட்டு விலகிப்போகிறதில்லை-என

*A Building-என்பது-on-அல்லது-in building என்பதுக்கொக்கும்.

வரும்.

அதுவுமன்றி ing-என்பதை யீற்றிலுடைய பெயரெச்சம்-அல்லது தொழிற் பெயரானது வினையைப்போலே பிரயோகிக்கப்படும்போது தன்க்கு மூலமாகிய வினையைப்போலே மொழிபெயர்க்கப்படும். உ-ம். He is well placed for <u>gaining</u> experience. அவனப்பியாசத்தையடைவதற்கு(அப்பியாசப்படுவதற்கு) தகுந்தவஸ்தலத்திலிருக்கிறான்-என்வரும். ஆனால் அது பெயர்ச்சொல்லைப் போலே பிரயோகிக்கப்படும்போது பெயர்ச்சொல்லைப் போலேவழங்கித் தனக்குமுன் சார்புச்சொல்லையுந் தனக்குப்பின்-of-என்பதையுங் கொண்டிருக்கும். உ-ம். He is well placed for <u>the</u> <u>gaining</u> <u>of</u> experience. அவனப்பியாசத்தையடைவதற்கு (அப்பியாசப்படுவதற்கு) தகுந்தவஸ்தலத்திலிருக்கிறான்-என்வரும்.

## ௰உம் சூத்திரம்

To be இருத்தலென்னும் வினையும் செயப்பாட்டுவினைகளுந் தன்வினைகளுந் தங்களுக்குமுன்னுள்ள வேற்றுமையைப்பின்னேயும் வரக்கேட்கும். உ-ம். <u>He</u> is the <u>man</u>. இவன்றானந்த மனிதன். I took <u>James</u> to be <u>him</u> யாக்கோப்பவனென்று நினைத்தேன்-என வரும்...

## சிறப்புச் சூத்திரங்கள்

௩௨௬. இப்படிப்பட்ட வாக்கியங்களில் உள்ள வினைகள் எழுவாயையும் பயனிலையையு மொன்றாகச் சேர்க்கிறபடியினாலே (Copula) இடைப்புணரென்று சொல்லப்படும். ஏறக்குறைய எவ்வினையு மிப்படிப் பிரயோகிக்கப்படலாம். இவ்வாறே: He struck hard. கெட்டியாயடித்தான். He walked fast. விரைவாய் நடந்தான். He came last. தாமதஞ் சென்று வந்தான். She moves a goddess, and she looks a queen. அவள் தேவதையைப்போலே நடந்து இராக்கினியைப்போலே தோன்றுகிறாள். என்வரும்.

௩௨௭. கேள்விகேட்கிறதுக்கு வருகிற வார்த்தையானது எந்த வேற்றுமையிலிருக்குதோ வந்த வேற்றுமையிலேதான் மறுமொழி சொல்லுகிற வார்த்தையு மிருக்கவேண்டும். உ-ம். Whose pen is this? இதாருடைய-இறகு? John's. அருளப்பனுடையது. என்வரும்.

## ௬௩ம் சூத்திரம்

ஒரு வினைச்சொல்லானது வேறே வினைச்சொல்லை யெச்சவிதத்தில் வரக் கேட்கும். உ-ம். He loves to read. அவன் வாசிக்க விரும்பு

கிறார்- என்வரும்.

## சிறப்புச்சூத்திரங்கள்

பெயர்ச்சொற்களுமுரிச்சொற்களுமுதலாய் வினைச்சொல்லையெச்சவிதத்திற்கேட்கும். உ‑ம். A desire to learn. படிக்கிறதற்காசை. Desirous to learn. படிக்கவாசையுள்ள- என்வரும்.

உ‑ம். Behold- பார்க்கிறது- Bid. கற்பிக்கிறது- Dare- துணிகிறது- Feel- உணருகிறது- Find- கண்டுபிடிக்கிறது Have. விரும்புகிறது Hear கேட்கிறது- Know- அறிகிறது Let- விட்டுவிடுகிறது- Make செய்கிறது Need- அவசரமாயிருக்கிறது- Observe, Perceive, See. பார்க்கிறது- காண்கிறது முதலியவைகள்செய்வினைகளாய் வரும்போது- அவைகளுக்குப்பின்- எச்சவிதத்துக்கடையாளமான- To- என்பது கெடும். உ‑ம். He bad her depart. அவள் புறப்படும்படியாய்க்கற்பித்தான். I saw him strike the blow. அவனடிக்கிறதைக்கண்டேன்- என்வரும். ஆனால் Let- என்பது தவிர மற்றவைகள் செயப்பாட்டுவிதத்தில் வரும்போது- To- என்பதை வரக்கேட்கும். உ‑ம். He was seen to strike the blow. அவனடிக்கிறதாகத்தோன்றினான். She was bid to depart. அவள் புறப்படும்படியாய்க்கற்பிக்கப்பட்டாள்- என்வரும்.

☞ இவ்விலக்கணநூலோர் சொல்லும்படி போலே (The generic verbs) சாதாரணவினைகளாகிய May, Can, Shall, Will, Must, என்பவைகளும் நாங்கள் கேட்கிற எச்சவினைக்கு முன்னே To என்பதைக் கொள்ளாதென்றறிக.

௩வது. எச்சவினையிலுள்ள பலவினைகள் கூட்டிடைச்சொல்லா விரைந்து வரும்போது To என்னுங்குறிப்பானது வழக்கமாய் முந்தின வினைக்குமுன்னே மாத்திரம் வைக்கப்படும். உ-ம். I taught him both to read and write. அவனை வாசிக்கவும் எழுதவும் படிப்பித்தேன் - என வரும்.

௪வது. இவ்வசனங்கள் செய்வினையெச்சவினைத்தையாகிலுஞ் செயப்பாட்டுவினையெச்சவினைத்தையென்கிலும் (வித்தியாசமன்றி) வரக்கேட்கும். உ-ம். விட்டுவிடுவதற்குரிய வீடு - என்பதற்கு A house to let அல்லது to be let. என்வும். இது புகழத்தகாத காரியம் என்பதற்கு - This was not a thing to commend. அல்லது to be commended. என்வும் வரும்.

௫வது. எச்சவினையானது இவ்விதைச்சேர்மானமின்றித் தனித்து வரும். உ-ம். To speak plainly, I do not believe it. உள்ளதைச்சொல்லுகிறதற்கென்ன - நானதை விசுவசிக்கிறதில்லை - என வரும்.

## விசேஷ சூத்திரம்

காலத்தின் மட்டில் (தங்களுக்குள்) ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டு வருகிற வினைகளையுமற்றச்சொற்களையும் பிரயோகிப்பதிலே காலத்தினொழுங்கையநுசரிக்கவேண்டும். உ-ம். அவனைப்போனவாரங்கண்டேன். என்பதற்கு- I saw him last week. என்று சொல்லவேண்டுமேயொழிய I have seen him last week -என்று சொல்லவொண்ணாது....

## சிறப்புச்சூத்திரங்கள்

௧வது. To command- கற்பிக்கிறது. Desire- ஆசைப்படுகிறது. Expect- காத்திருக்கிறது. Hope- நம்புகிறது - Intend- கருதுகிறது (நினைத்திருக்கிறது) Permit. உத்தரவு கொடுக்கிறது - என்று - அர்த்தங்கொள்ளுகிற வினைகளுமிதற்கொத்த வேறுசில வினைகளும் (அந்தந்தச்சமயத்துக்கு) தகுந்ததுபோலவே நிகழ்காலத்தையாகிலு, மெதிர்காலத்தையென்கிலும் (தங்களுக்குப்பின்) வரக்கேட்கும். உ-ம். நீ வருவாயென்று நம்புகிறேன்-என்பதற்கு. I hope you would come. என்று சொல்லவேண்டுமேயொழிய- I hope you would have come

என்று சொல்லவொண்ணாது. அன்றியும். காணதைச்செய்ய நினைத்திருக்கிறேனென்பதற்கு - I intend to do it. என்றுசொல்லவேண்டுமேயொழிய I intended to have done it - என்று சொல்லவொண்ணாது.

௨வது. எப்போதுமெய்யாயிருக்கிறசுவோபங்கள் நிகழ்காலம்-இறந்தகாலம்-எதிர்காலமாகிய விம்மூன்றிலெதைக்காட்டினபோதிலும் வழக்கமாய் நிகழ்காலத்தில் வைக்கப்படும். உ-ம். இரண்டுமிரண்டு நாலென்றுமுதலாய் வனுக்குத்தெரியாதுபோலேதோன்றினது. [என்பதற்கு] He seemed hardly to know that two and two make four. என்று சொல்லவேண்டுமேயொழிய made. என்றுசொல்லவொண்ணாது. அன்றியும் He will tell you that whatever is, is right. உள்ளது-எதுவோ-அதுவேசரியென்றுனக்குச்சொல்லுவான். என வரும். ஆகிலும். That. என்கிற சுட்டிடைச்சொல்லைப்பிரயோகிக்கும்போது இவ்முறை நிகழ்காலத்தை(பிரயோகிக்க)க்கூடாது. உ-ம். Others said that it is - Elias. மற்றவர்களவர்-எலியாசென்று சொன்னார்கள்-என வரும். இச்சமயத்திலேயொன்றில் That-என்பதைத்தள்ளிப்போடவேண்டும்-ஒன்றில்-is-என்பதற்குப்பதிலாய்-was. என்பதை வைக்கவேண்டும்.

௩வது. புணர்காலங்களுண்டாக்குவதில்இறந்தகாலத்தைப்பிரயோகிக்கவொண்

௩-து. உ-ம். போயிருக்க-என்பதற்கு-To have gone- என்று சொல்லவேண்டுமொழிய To have went என்று சொல்லவொண்ணாது.

---

## ௱௫௪. சூத்திரம்

வினையுரிச்சொற்களானது வினைச்சொற்கள் உரிச்சொற்கள் அல்லது வேறே வினையுரிச்சொற்களின் குணத்தைக்காட்டும். உ-ம். He acts nobly. அவன் மேன்மையாய் நடக்கிறான். That is extremely large. அது மிகவும் விஸ்தாரமாயிருக்கின்றது. He reads very distinctly. அவன் மிகவுந் திருத்தமாய் வாசிக்கிறான்- என வரும்.

---

## சிறப்புச்சூத்திரங்கள்

௧வது. சில வினையுரிச்சொற்கள் உரிச்சொற்களாக வழங்கும். உ-ம். The above remark. மேற்சொல்லிய விவரம். In after ages. பின்வரும் யுகங்களில்- என வரும். ஆனால் உரிச்சொற்களொருகாலும் வினையுரிகளாக வழங்காது. உ-ம். அவன் வெகு நேர்த்தியாய்ப் பேசுகிறான்- என்பதற்கு- He speaks very beautifully என்று சொல்லவேண்டுமேயொழிய. He speaks very beautiful. என்று சொல்லவொண்ணாது. அன்றிய மேற்சொல்லப்பட்ட இவ் சமயங்கள் தவிர (மற்றச் சமயங்களில்) வி

வினையுரிச் சொல்லையுரிச் சொல்லாகப் பிரயோகிக்கவொண்ணாது.

௨வது. வினையுரிச்சொற்க ளுரிச்சொற்களுக்கு முன்னுமே வினைச்சொற்களுக்குப் பின்னும் புணர்காலங்களிலுள்ளதுவினை வினைக்கும் பிரதான வினைக்கும் இடையிலும் வைக்கப்படும். உ-ம். Greatly exalted. மிகவுமாட்சிமை பொருந்திய. He acted justly. அவனீதிமுறை தவறாமலச் செய்தான். It was forcibly expressed. அது பலத்திரமாயச் சொல்லப்பட்டது. என்வரும்.

௩வது. வினையுரிச்சொல்லானது வினைச்சொல்லுக்குமதின் நேரான நேமகத்துக்குமிடையில் வரவொண்ணாது. உ-ம். அவன் நேர்த்தியாய்க் கதை சொன்னான் - என்பதற்கு He told his tale pleasingly. என்று சொல்லவேண்டுமொழிய. He told pleasingly his tale. என்று சொல்லவொண்ணாது. (இச்சிறப்புசூத்திரத்துக்கு விரோதமான விஷயங்கள்சிலவுண்டென்றறிக.) வினையுரிச்சொல்லானது வசனத்தைமுழுதுஞ் சாரும்போதெங்கிலும் உறுதிப்பாடாய்ப் பிரயோகிக்கப்படும்போதாகிலுமது பெரும்பாலுமுதலில் வைக்கப்படும். உ-ம். Unfortunately he had excited the queen's displeasure. என்னமோ அவனைப்பிடித்தபொல்லாத வேளை இராக்கினியின் மனத்தாங்கலை வருவித்துக்கொண்டான். Never was a

man so used. ஒருவனுக்குமப்படிச்செய்தநேயில்லை - என்வரும்.

௪ வது. Always - எப்போதும். Never - ஒருகாலுமில்லை. Often - அடிக்கடி Sometimes - சிலவேளை முதலிய வினையுரிச்சொற்கள் To be - இருத்தலென்னும் வினைதவிர்ப்பெரும்பாலுந்தாங்கள் சாரும் வினைகளுக்குமுன்னே வைக்கப்படும். உ-ம். He always uses the purest style. (அவனெழுதுகிறதிலே) எப்போதுமிகவுஞ்சுத்தமான பாஷை நடையையநுசரிக்கிறான். He often talks foolishly. அவனடிக்கடிபுத்திகெட்டதனமாய்ப்பேசுகிறான். He is never at home. அவனொருகாலும் வீட்டிலிருக்கிறதில்லை - என்வரும்.

௫ வது போதம் பொருள்ள வினைகளோடு வருகிற - Hither, Thither, whither, என்பவைகளுக்குப்பதிலாய். Here, There, where, என்பவைகள் பெரும்பாலும் வழங்குவது முறையாம். உ-ம். Where are you going. எங்கேபோகிறாய். Come here. இங்கே வா. என்வரும்.

௬ வது. இரண்டெதிர்மறைகளொரு (affirmative) உடன்படிப்பாட்டுக்குச்சரியாயிருக்கும். உ-ம். It is not unjust. அது அநியாயமில்லை - என்வரும். (ஆகிலுமிவ்வித மொழிநடையத்தினையுறுதியுள்ளதல்லவென்றறிக)

௭ வது. வினையுரிச்சொற்களைச்சரியாய்ப்பிரயோகிப்பதிலே மிகவுமெச்சரிக்கையா

யிரவிட்டால் வசனத்தினருத்தமானதுமறைவுபொருளாகும். அவ்வதுமாறிப்போம். இவ்வாறே: That only was offered him. அதுமாத்திரமவனுக்குக்கொடுக்கப்பட்டது. அவ்வது That was offered him only. அது அவனுக்குமாத்திரங்கொடுக்கபபட்டது - என்வரும். அன்றியும்- Never, Ever. என்னுமிவ்விரண்டிலொன்றைவேறொன்றுக்குப்பதிலாய்ப்பிரயோகிக்கவொண்ணாது.

அவது. தமிழர். Very - மிகவுமென்பதுக்குப்பதிலாய் - Too - என்பதை வைப்பதிலேயடிக்கடி தப்பிதஞ்செய்கிறார்கள். உ-ம். இப்போதெனக்கு ஆதாய மெத்தவுண்டு - என்பதற்கு I am now enjoying too large profits - என்னும். கொஞ்சத்துக்குள்ளேமிகவுமழைபெய்யுமென்று நம்புகிறேன் - என்பதற்கு I hope we shall have too much rain soon - என்னுஞ்சொல்லாமல் very large profits - என்னும் very much rain என்னுஞ்சொல்லவேண்டும்.

## ௫௰௩. சூத்திரம்

இன்னிடைச்சொற்கள் பொருள் வேற்றுமையைக் கேட்கும். உ-ம். The medal was taken from him and presented by the judge to her. கீர்த்திமுத்திரையானது அவனிடத்திலிருந்தெடுக்கப்பட்டு நியாயாதிபதியாலவளுக்குக்கொடுக்க

ப்பட்டது என்வரும்.

## சிறப்புச்சூத்திரங்கள்

௩௯௪. முன்னிடைச்சொற்கள் இவ்வினை யுரிச்சொற்களைக் கேட்கும். உ-ம். Till now. இதுவரைக்கும். Till then. அதுவரைக்கும் என்வரும்.

௩௯௫. கூடியமாத்திரம் எப்போதுமுன்னிடைச்சொல்லானது (நான்கேட்கிற) பொருள் வேற்றுமைக்கு அடுத்தாப்போலேமுன்னே வரவேண்டும். உ-ம். யாருக்கதைக் கொடுத்தாய் என்பதற்கு. To whom did you gave it. என்று சொல்லவேண்டு மொழிய whom did you gave it to என்று சொல்லவொண்ணாது. ஆனால் whom என்பதுக்குப்பதிலாய் That என்பதை வைத்தால் முன்னிடைச்சொல் அதுக்குமுன்னே வைக்காமல் அந்த வசனத்தின்பங்குக்கடைசியில் வைக்கவேண்டும். உ-ம். The person that I gave it to, is dead. நானதைக் கொடுத்தமனிதனிறந்துபோனான் என்வரும் (அதாவது நான் யாருக்கதைக் கொடுத்தேனோ அந்தமனிதனிறந்துபோனான்) என்வரும்.

இரண்டுமுன்னிடைச்சொற்களோர்பெயர்ச்சொல்லைச்சாரும்போது ஷை பெயர்ச்சொல்லுக்கு முந்தின முன்னிடைச்சொல்லுக்குப்பின்னும் பெயர்ச்சொல்லைக் குறிக்கிற பெயருக்குப் பிரதிச்சொல்லைப் பிந்தின முன்னிடைச்

சொல்லுக்குப்பின்னும் வைக்கவேண்டும். உ-ம். நான் நாற்காலியின் கிட்டப்போய் தின்மேலுட்கார்ந்தேன். என்பதற்கு. I went to the chair and sat down on it. என்று சொல்லவேண்டுமேயொழிய. I went to and sat down on the chair. என்று சொல்லொண்ணாது.

௩௨வது. By. என்பது பெரும்பாலும் பிரதான கருத்தாவையும். With. என்பது. உதவியல்லது. துணைக்கருத்தாவையுங் குறிக்கும். உ-ம். It was written by me with a pen. அது. இறகைக் கொண்டு என்னாலே யெழுதப்பட்டது. என வரும். ஆறு. உயிரில்லாத வஸ்துக்களை யுயிருள்ள வஸ்துக்களாகப் பாவித்துப்பேசும்போது இவ்விசை பிரதான கருத்தாவானது துணைக்கருத்தாவாகும். உ-ம். Wonderful things are effected by the pen. இறகாலேயாச்சரியமான காரியங்கள் செய்யப்படுகின்றன. என வரும்.

௩௩வது. Countries. தேசம். Counties. நாடு Districts. மாகாணம். Capitals. இராசதானிப் பட்டணம் முதலியதுகளின் பெயர்களுக்கும் பேசுகிறவன் குடியிருக்கிற Town. பட்டணம் அல்லது Village. ஊரின் பெயர்களுக்கும்முன். பெரும்பாலும். In. என்பது வைக்கப்படும். Towns. பட்டணம். Villages. ஊருமுதலியமற்றசிற்றூருகளின் பெயர்களுக்குமுன்னே. at. என்பது வழங்கும். உ-ம். He is in

America அமெரிக்காக்கண்டத்திலிருக்கிற ன். In Turkey. துருக்கர்தேசத்தில். In London லண்டன்பட்டணத்தில். In Madras சென்னை பட்டணத்தில். He stays at Leamington-லீ மின்கட்டனென்னும்பட்டணத்திலிருக்கிற ன். At Gore. கோவூரில்-என வரும். பிறவுமன்ன

ருவது. சிலவார்த்தைகளும் வசனங்களு ம் (தங்கள் தங்களுக்குரிய) விசேஷமான மு ன்னிடைச்சொற்களின் வரக்கேட்கும். — (See Supplement on Preposition)

## ௱௭௬. சூத்திரம்

கூட்டிடைச்சொற்களானது-ஒரேவித மான காலங்களையும் விதங்களையும் வேற்று மைகளையுஞ் சரியான வாக்கியப்பகுப்புக் களையும்-அவ்வது வசனத்தின் பங்குகளைய ிணைக்கும். உ. He loves and obeys God.-அ வன் சர்வேசுரனைச் சிநேகித்து-அவருக் குக்கீழ்ப்படிந்து நடக்கிறான். He and she are happy. அவனுமவளும் பாக்கியவான் களாயிருக்கிறார்கள். To fear God and to honor the king, are important duties. சர்வே சுரனுக்குப்பயப்படுகிறதுமிராசாவைச்ச ங்கிக்கிறதுமுக்கியமான கடமைகளாம். என வரும்.

## திறப்புச் சூத்திரங்கள்

௧வது. கூட்டிடைச் சொற்களில் விசேஷவிபரீதமான விதங்களையுங் காலங்களையுமிசைக்கும். இப்பேர்ப்பட்ட சமயத்திலே பெரும்பாலுமெழுவாயையிரட்டிக்க வேண்டும். உ-ம். The Steamer arrived in good time last month, but it is too late this. போனமாதம் புகைக்கப்பலானது தகுந்தநேரத்திலே வந்து சேர்ந்தது ஆகிலிந்தமாதந் தாமதமாயிருக்கின்றது என்வரும்

௨வது பல்வார்த்தைகளையிசைவுபட அல்லது பிரிவுபடப்பேசும்போது And. or அல்லது nor. என்பது வழக்கமாய்க் கடைசிச் (சொல்லுக்குமுன்னே) மாத்திரம் வைக்கப்படும். உ-ம். He eats, drinks and sleeps. அவன் சாப்பிட்டுக் குடித்து நித்திரைசெய்கிறான். He neither eats drinks nor sleeps. அவன் சாப்பிடுகிறதுமில்லை குடிக்கிறதுமில்லை தூங்குகிறதுமில்லை என்வரும்.

௩வது. (Contingency) சந்தேகத்தையும் (Futurity) எதிர்காலவிடைக்கலையையுங் காட்டுகிற கூட்டிடைச் சொற்கள் வியங்கோள் விதத்தைக் கேட்கும். உ-ம். If he be alone give him the letter. அவன் தனியேயிருந்தால் அவனுக்குக் காகிதத்தைக் கொடு என்வரும். ஆகிலுங் காட்டல்விதத்திலாயிச் சமயங்களிற்பல முறை பிரயோகிக்கப்படும்.

சந்தேகத்தையும் எதிர்காலவிடைகிலகளையுங் காட்டாதபோது காட்டல்விதத்தைப் பிரயோ

க்கவேண்டும். உ-ம். If he speaks as he thinks, he may safely be trusted. அவன் தானினைக்கிறதுபோலேபேசினால் அவன்பேரில் நம்பிக்கை வைப்பதிலேமோசமொன்றுமிராது - என்வரும்.

௪வது. If, lest, though, until - முதலியவைகளுக்குப்பின்னுவினையானது பலமுறை கெடும். உ-ம். If he sell it, I cannot prevent him. அவனதைவிற்றால் நானவனுக்கு விக்கினம்பண்ணக்கூடாது - என்வரும். இது: If he should sell it &c. என்பதுக்குச்சுருக்கம். மேற்சொல்லிய கூட்டிடைச்சொற்களிற்சிலதும் That - என்பதும் பலமுறை கெடும். உ-ம். Were he not blind, he would acknowledge it. அவன் குருடனாயிராதிருந்தால் அதையங்கீகரித்துக்கொள்ளுவான் - என்வரும். இது: If he were not blind &c. என்பதுக்குச்சுருக்கம். He knows I must sell. நான்விற்கவேணுமென்றவனுக்குத்தெரியும் - என்வரும். இது: He knows that I must sell. என்பதுக்குச்சுருக்கம் - என்வரும்.

௫வது. Than (பார்க்க - விட - அல்லது காட்டிலும்) என்பது ஒப்பனையுரியிலிருக்கிற வுரிச்சொற்களுக்கும். Rather, Other - என்பவைகளுக்கும் பின்வரும். மேலும், அது பலமுறை ஐவேற்றுமையுள்ள சம்பந்தச்சொல்லுக்குப்பின்வரும். உ-ம். I would have the book rather than the picture. படத்தைவிடப்புத்தகமெனக்கிருந்தால் தாவிலை. He is no other than general Kleber. அவன் சேனாதிபதியான க்கிலேபரென்பவனேதவிர வேறொருவனுமல்ல - என்வரும்.

௬-வது. Than அல்லது As. என்பதுக்குப்பின் வரும் பெயருக்குப்பிரதிச்சொல்லானது (தான்சாரும்) வினையோடுபொருந்தும்-அல்லது உள்ளடங்கியிருக்கிற வினையாவது முன்னிடைச்சொல்லாவது அதைத்தத்தமக்குரிய வேற்றுமையிற் கேட்கும். உ-ம். He is wiser than I (am) அவனென்னைப்பார்க்க விவேகியாயிருக்கிறான். I loved him more than (I loved) them. அவர்களைப்பார்க்க இவனையதிகமாய்ச் சிநேகித்தேன். You are as tall as I (am). நீயென்னைப்போலேயுயரமாயிருக்கிறாய். என வரும்.

எ-வது. சில கூட்டிடைச்சொற்கள் தத்தமக்குரிய கூட்டிடைச்சொற்களைப்பின்வரக்கேட்கும்.

இவ்வாறே

Either or உ-ம். It was either the man or the woman அ
" " ந்தமனிதனல்லதிந்தப்பெண்பிள்ளைதா...ன்.
Neither nor உ-ம். He will neither go nor stay. அவன்போக
" " வுமாட்டானிருக்கவுமாட்டா.......ன்
Whether or உ-ம். Whether he agrees or not, it must be
" " done. அவன் சம்மதித்தாலுஞ் சம்மதியா
" " விட்டாலுங் காரியம் நடக்கவேணு....ம்.
Though yet உ-ம். Though they paid him high, yet he
" " was unfaithful. அவர்களவனுக்குயர்ந்த
" " சம்பளங் கொடுத்தாலுமின்னமவன்பி
" " ரமாணிக்கமுள்ளவனல்ல.
As as உ-ம். It is as clear as the sun (day) பட்
" " டப்பகலைப்போலே தெளிவாயிருக்கின்றது.
As so உ-ம். As is the child, so is the man. குழந்
" " தையாயிருக்கும்போதெப்படியோ பெரி
" " யவனாயிருக்கும்போதுமப்படித்தான்.
So as உ-ம். He is not so attentive as John. அருள
" " ப்பனைப்போலேயவனவ்வளவு கவன
" " முள்ளவனல்ல.
So that உ-ம். He was so determined that nothing
" " could persuade him. அவனெவ்வளவு
" " நேர்க்கத்தன்மையாயிருந்தானென்றுசொல்லக்

" " ருசியானதுங் கவில்லை.

Both And உ-ம். It is both cheap and good. அதுமலி
" " வுமாய் நல்லதுமாயிருக்கின்றது
If then உ-ம். If you saw him, then I will yield the
" " point. நீயவனைக் கண்டாலப்போது நா
" " ன் அக்காரியத்துக்குச் சம்மதிப்பேன்.
Because-therefore.. உ-ம். Because he sinned, therefore
" " he is unhappy. அவன் பாவஞ்செய்தநிமி
" " த்த நிர்ப்பாக்கியவானாயிருக்கிறான்.
Not never. உ-ம். He never tires nor stops to rest. அவ
னொருகாலுங் களைக்கிறதுமில்லை இளைப்
பாறுகிறதுக்கு நிற்கிறதுமில்லை- என்வரும்.

---

## வியஃசூத்திரம்

உணர்த்தியிடைச்சொற்கள் தன்மையிடச்சொல்ல ஐவேற்றுமையிலு முன்னிலையிடச்சொல்லப் பெயர்வேற்றுமையிலுங் கேட்கும். உ-ம். Unto! ஐயோ (நிர்ப்பாக்கியமான) நான் O ye hypocrites! ஆகள்ளராளிகளே. என்வரும். ஆனாலிவைகள் வசனங்களிலெவனிலும் வாக்கியங்களிலுமொருவேற்றுமையையுங் கொள்ளாமல் தனித்து நிற்கும். உ-ம். O! I am delighted. ஆ ஆ- எனக்குமிகவுஞ்சந்தோஷமாயிற்று- என்வரும்.

## சிறப்புச்சூத்திரம்

இயாதொரு காரியத்தின்பேரில் மிகுந்த வாஞ்சையைக் காட்ட வேண்டியபோது Oh- என்பதுக்குப் பின்- for- என்பதை வைப்பதேமுறை. உ-ம். Oh! for my native country. ஆயென் சொந்தத் தேசமே என்வரும்.

முற்றும்.

# SUPPLEMENT

TO

## SYNTAX

### ON ARTICLES

1. When must we use the indefinite article *a* or *an*?

1. யாதொரு-ஒருமைப்பெயர்ச்சொல்லானது-ஒன்றையும் விசேஷித்துக்குறியாத போது-அதற்குமுன்-ஒரு என்னும் வார்த்தையைச் சேர்க்கக்கூடுமாகில் அதற்குமுன்-இங்கிலீசில்ப்பலமுறை-a-அல்லது-an என்பதை வைக்கவேண்டும். உ-ம். நல்லபையனானவன் தன் தாய் தந்தைகளைச் சிநேகிக்கிறான். அதாவது: ஒரு நல்லபையனானவன்-Etc. A good boy loves his parents. சர்வேசுரன் கெட்டமனிதனைப்பகைக்கிறார். அதாவது: சர்வேசுரன் ஒரு கெட்டமனிதனை Etc. God hates a wicked man. அவனென்னைக் கழியாலடித்தான். அதாவது: அவனென்னையொரு கழியாலடித்தான். He struck me with a stick-எனவரும். இவ்வுதாரணங்களில்-நல்லபையனானவன்-கெட்டமனிதனை- கழியால்- என்பவைகளுக்குமுன்-ஒரு என்னும் வார்த்தையைச் சேர்த்து- ஒரு நல்லபையனானவன் தன் தாய் தந்தைகளைச் சிநேகிக்கிறான் சர்வேசுரன் ஒரு கெட்டமனிதனைப்பகைக்கிறார். அவனென்னையொரு கழியாலடித்தான்-என்று சொல்லக்கூடுமாயிருப்பதால் இங்கிலீசில்-a-அல்லது-

an- என்பது வைக்கப்பட்டமைகாண்க.

16. ஆ. ஷ ஒரு - என்னும் வார்த்தையானது - எண்ணிக்கையைக்குறித்தால் - one - என்பதை வைக்கவேண்டும்

2. பட்டம் - உத்தியோகம் - அலுவல் - அந்தஸ்து - சாதி மதாசாரம் முதலியவைகளைக் காட்டுகிற பெயர்ச்சொற்கள் யாதொருவனையல்லது யாதொருவஸ்துவை விசேஷித்துக்குறியாமல் - அவ்வகைமனிதரிலொருவன் அல்லது - அவ்வகைவஸ்துக்களிலொன்று - என - அருத்தங்கொண்டால் ஷ - பெயர்ச்சொற்களுக்குமுன் - a - அல்லது - an - என்பதை வைக்கவேண்டும். உ-ம். Augustus, an emperor of Rome. உரோமாபுரியிராயனான - அகஸ்டசென்பவன். Cæsar, a Roman general. உரோமாபுரிச்சேனாதிபதியாகிய சீசரென்பவன். He is a taylor. அவன் தையல்க்காரன். James, a Physician. வைத்தியனான யாகப்பன். He is an English man. அவனிங்கிலீசுக்காரன். He is a Catholic. அவன் கிறிஸ்துவன். He is a Protestant. அவன்பதிதன் Thembavany, an epic poem. புராணகாப்பியமான தேம்பாவணியென வரும்.

இவ்வசனங்களின் பொருளென்னவென்றால் உரோமாபுரியிராயர்களிலொருவனான அகஸ்டசென்பவன். உரோமாபுரிச்சேனாதிபதிகளிலொருவனான சீசரென்பவன். அவன் தையல்க்காரர்களிலொருவன். வைத்தியர்களிலொருவனான யாகப்பன் அவனிங்கிலீசுக்காரர்களிலொருவன். அவன் கிறிஸ்

இவர்களிலொருவன். அவன்பதிகர்களிலொருவன் புராணகாப்பியங்களிலொன்றென் தேம்பாவணி எனக்குறியாப்பொதுப்பொருளாம்.

3. யாதொருவன் மன்னகுடும்பத்தைச்சார்ந்தவனென்று சொல்லவேண்டிய போது. அக்குடும்பத்தைக் காட்டிய சிறப்புப்பெயர்ச்சொல்லுக்குமுன்-a-அல்லது-an- என்பதை வைக்கவேண்டும். உ-ம். அவன் காம்பெல்-எனுங்குடும்பத்தைச்சேர்ந்தவன். He is a Campbell. எனவரும். ஆனால் தமிழருக்குள் குடும்பப்பெயரில்லாமையால்- யுரோப்பியரைக்குறித்து- இது சொல்லப்பட்டது. அன்றியும். He has the Courage of an Achilles. அக்கிலிசென்பவனுடைய தைரியமவனுக்குண்டு. He is a Cicero. அவன் சிசெரோ-என்பவன்தான். அதாவது: சிசெரோவென்பவனிடத்திலுள்ளவாசாலகமிவனிடத்திலுண்டு. You are a Compacarnan. கும்பகர்ணன்தான். அதாவது: கும்பகர்ணனிடத்திலுள்ள மிலமுன்னிடத்திலிருக்குது. He is a Nero. அவன் நீரோவென்பவன்தான். அதாவது: நீரோவென்பவனிடத்திலுள்ள நிஷ்டூரமவனிடத்திலிருக்குது- எனவரும்.

4. ஆச்சரியம்- சந்தோஷம்- கஸ்திமுதலியவைகளைக் காட்டுவதற்கு- இங்கிலீஷில்- What- எவ்வளவு- என்னுஞ்சொல்வரும்போது- அதற்குப்பின்னொருமைப்பெயர்ச்சொல்வந்தால்- அப்பெயர்ச்சொல்லுக்குமுன்-a-அல்லது-an- என்பதைப்பிரயோகிக்கவேண்டும். உ-ம். What a noise. எவ்வளவுபெரிய சத்தம். What a lazy boy he is. அவனெவ்வளவுசோம்பலுள்ள பையன்.

5. Few-சில. Great many-அநேகாநேக. Dozen-பன்னிரண்டு. Score-இருபது. Hundred-நூறு. Thousand-ஆயிரம் இவை சொற்களுக்குமுன் A என்பதை வைக்கவேண்டும். உ-ம். A few books-சில புஸ்தகங்கள். A great many boys-அநேகாநேகம் பிள்ளைகள். A dozen rupees-பன்னிரண்டு ரூபாய். A score years-இருபது வருஷம். A hundred men-நூறு மனிதர். A thousand oxen-ஆயிரம் எருதுகள். என்வரும்.

அன்றியும். அநேகம் விசையென்பதற்கு-Many a time-என்றுஞ் சொல்லலாம்.

6. காலம்-விசை-அளவுமுதலியவைகளைக்குறிக்கிற பெயர்ச்சொற்களுக்குமுன் a-அல்லது-an-என்பதை வைக்கவேண்டும். இச்சமயத்தில் a-அல்லது-an-என்பது-ஒவ்வொரு-என்பதற்கொக்கும். உ-ம். He earns two hundred rupees a year-அவன் வருஷத்துக்கிருநூறுரூபாய் சம்பாதிக்கிறான். அதாவது: ஒவ்வொரு வருஷத்துக்கு-Etc. He studies eight hours a day. அவன் ஒரு நாளைக்கெட்டு மணிநேரம்படிக்கிறான். Sugar costs two rupees a pound. சர்க்கரை ராத்தலொன்றுக்கிரண்டு ரூபாய் விலை. Paddy costs three rupees a Colum. நெல்லு கலத்துக்கு மூன்று ரூபாய் விலை-என்வரும்.

7. So-அவ்வளவு. As-போல. Too-மிகவும் மிச்சமாய். How-எவ்வளவு இவைகளிலொன்றாயினும் ஒரு உரிச்சொல்லுக்குமுன் வந்தால் அவ் உரிச்சொல்லுக்கும் அதற்குப்பின்வரும் ஒருமைப் பெயர்ச்சொ

வ்லுக்கும்-இடையிலே-a-அல்லது-an-என்பதை வைப்பதுமுறை. உ-ம். He is so stupid a man. அவனவ்வளவு புத்திகெட்டமனிதனாயிருக்கிறான்.— He is as upright a man as you. அவனுன்னைப்போலே நேர்மையானமனிதன்தான். This is too difficult a lesson. இது மிகவும் வருத்தமான பாடம். How beautiful an inkstand. எவ்வளவு நேர்த்தியானமைக்கூடு-என்வரும்

8. Half அரை. Such. இப்பேர்ப்பட்ட-என்பவைகளுக்கும்-இவைகளுக்குப்பின்வரும். ஒருமைப்பெயர்ச்சொல்லுக்குமிடையிலே. a-அல்லது-an-என்பதை வைக்கவேண்டும். உ-ம். Half a rupee. அரைரூபாய். Such an honest man as he, never breaks his word. அவனைப்போலே நேர்மையானமனிதனானவனொருகாலுந்தன்வார்த்தைப்பாட்டுக்கிரண்டகம்பண்ணுகிறதில்லை-என்வரும்.

9. இயாதொருபுத்தகத்தின்பெயர் பொதுப்பெயராயிருக்குமுன்- a-அல்லது-an-என்பதைவைக்கவேண்டும். உ-ம். It is a grammar. அது இலக்கணமாம். It is a Roman history. அது-உரோமைச்சரித்திரமாம். It is a dictionary. அது-அகராதியாம்-என்வரும்.

II. When must we use the defenite article the—?

---

1. யாதொருவஸ்துவைக்குறித்துப்பொதுவிலேபேசாமல்யாதொருவனுக்கு-அல்லது யாதொருவஸ்துவுக்கு அது சொந்தமாயிருக்குதென்று விசேஷித்து

ப்பெறும்போது அதுக்குமுன் பெரும்பாலும் The என்
னுஞ் சார்புச்சொல்லை வைக்கவேண்டும். உ-ம். The
virtue of a prince renders his subjects happy. இ
ராசாவின் புண்ணியமானது பிரசைகளைப் பாக்கி
யவான்களாக்குகின்றது. The gold of Peru is ce-
lebrated. பெருவென்னுந் தேசத்தின் தங்கமானது
பெயர்போனதாம். என்வரும். ஆனால் யாதொரு வ
ஸ்துவை விசேஷித்துக் குறியாமல் பொதுவிலே பெ
சிறுவதுக்குமுன்னொரு சார்புச்சொல்லையும் வைக்
கவொண்ணாது. உ-ம். Virtue is lovely. புண்ணியமான
து சிநேகத்துக்குரியதாம். Gold is precious. தங்
கமானது விலையேறப்பெற்றதாம். என்வரும்.

2. உறமுறை-சிநேகம்-முதலிய சேர்மானத்தைக்
காட்டுகிற பெயர்ச்சொற்களுக்குப்பின் என்கிற-
ஆகிற- ஆன- ஆகிய-முதலியவைகள் வரும்போது-
அப்பெயர்ச்சொற்களுக்குமுன் பெரும்பாலும்-The.
என்பதை வைக்கவேண்டும். உ-ம். Hannibal, the
son of Hamilcar- அமில்க்காரென்பவனுடைய கு
மாரன்-அன்னிபாவென்பவன். Saturn, the father
of Jupiter. ஜுபித்தேரென்பவனுடைய தகப்பனா
ன சாட்டூரனென்பவன். John, the brother of James.
இயாக்கப்பனுடைய சகோதரனான அருளப்பன்.
Peter, the friend of Paul. சின்னப்பனுடைய சிநே
கிதனான இராயப்பன்- என்வரும்.

3. யாதொரு சிறப்புப்பெயருக்கும் பொதுப்பெய
ருக்குமிடையிலே- ஆன- ஆகிற- ஆகிய- என்கிற-எ
ன்பவைகள் வரும்போது இங்கிலீசில் The பொதுப்

பெயரைச் சிறப்புப் பெயருக்குப் பின் வைத்தால் அது
க்குமுன் பல்முறை The என்பதை வைக்கவேண்டும்
உ-ம். Gregory, the Pope. அர்ச். பாப்புவான கிறேகோ
ரியென்பவர். Washington, the geneal. சேனாதிப
தியான வாஷிங்கட்டனென்பவன். Gopaul, the car-
penter. தச்சனாகிய கோபாலவென்பவன். Onega, the
lake. ஏரியாகிய ஒனிகாவென்பது என்வரும்.

N. B. ஆகிலும் ஷெ பொதுப்பெயரானது இரா
சரிக்கத்தைக் காட்டுகிற சொல்லானால் அதுக்கு மு
ன் The என்பது கெடுவதுமுறை. உ-ம். Henry, King
of England. இங்கிலான்று தேசத்துக் கிராசாவா
ன என்ரியென்பவர் என்வரும்

4. அன்றியும் இங்கிலீசிலே ஷெ பொதுப்பெயரைச்
சிறப்புப்பெயருக்குமுன் வைத்தால் அதுக்குமுன்னே
சுட்டுச்சொல் லையும் வைக்கவொண்ணாது. உ-ம்.
Pope Gregory. அர்ச். பாப்புவான கிறேகோரியென்
பவர். General Washington. சேனாதிபதியான வா
ஷிங்கட்டனென்பவன். Carpenter Gopaul. தச்சனா
கிய கோபாலவென்பவன். Lake Onega. ஏரியாகிய
ஒனிகாவென்பது என்வரும். இப்படிப் பொதுப்
பெயரைச் சிறப்புப்பெயருக்குமுன்னே வைப்பது
அதிக நலமென்றறிக.

N. B. ஆகிலும். Archduke, Archduchess. Czar,
Czarina, Emperor, Empress, Princess, Marquis, Ma-
rchioness, Constable, Chancellor, Monk. Sultan,,
Chevalier. முதலிய பொதுப்பெயர்கள் சிறப்புப்பெ
யருக்குமுன் வந்தாலும் அவைகளுக்குமுன் சார்புச்சொ

ங்களவர்க்கேட்கும். உ-ம். The emperor Augustus. அகஸ்டசென்கிறவிராயன். The princess Sophia. சோபியாளென்கிறவிராசகுமாரத்தி. The monk Anthony. அந்தோணியென்கிற வனவாசி. The sultan Aboosla. அபுஸ்லாவென்கிற துலுக்கவரசன்-என வரும்.

5. மேற்சொல்லியவாறே சிறப்புப்பெயருக்குமுன் பொதுப்பெயர் வரும்போது அப்பொதுப்பெயருக்குமுன் ஒரு உரிச்சொல் வந்தாலதற்குமுன்-The- என்பதை வைக்கவேண்டும். உ-ம். The celebrated Pope Gregory. பெயர்போனபாப்புவாகிய கிறகோரியென்பவர். The brave general Washington. தைரியமுள்ள சேனாதிபதியாகிய வாஷின்கட்டனென்பவன். The honest taylor Thomas. நேர்மையானதையல்க்காரனாகிய தோமாசென்பவன். எனவரும்பிறவுமன்ன.

6. ஆறு- கடல்- கப்பல்- இவைகளின் சிறப்புப்பெயர்களுக்குமுன்-The-என்பதை வைக்கவேண்டும். உ-ம். The Cavery. காவேரியாறு. The Ganges. கங்கையாறு. The Baltic. பால்ட்டிக்கென்னுங்கடல். The Mediterrnean. மெடிட்டெர்ரேனியன்-என்னுங் கடல். The Britania is a new ship. பிரிட்டேனியாவென்பது புதுக்கப்பலாம். எனவரும்.

7. சிறப்புப்பெயர்கள் பன்மையிலே வரும்போது அவைகளுக்குமுன்-The-என்பதை வைக்கவேண்டும். உ-ம். The Alps. அல்ப்பென்னும்மலைகள். The Maldives. மாலடிவென்னுந் தீவுகள். The Henrys. என்ரியென்பவர்கள்-என வரும்.

8. ஓர்சாதியாரையும், ஒருமதத்தினரையும், ஒருதொழிலாளரையும் கூட்டமாய்க் குறிக்கிற பெயர்ச்சொற்களுக்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உ-ம். The Italians and the Spaniards. இத்தாலியரும் இஸ்பானியரும். The Roman Catholics and the Protestants. கிறிஸ்தவர்களும் பதிதரும். The masons and the carpenters. கொல்லத்துக்காரரும் தச்சரும் எனவரும்.

9. பட்சிமிருகங்களுடைய பெயர் ஒருமையிலிருந்தாலுமந்தச் சாதியனைத்தையுங் காண்பிப்பதற்காகவப் பெயருக்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உ-ம். The dog is faithful. நாயானது பிரமாணிக்கமுள்ளது. அதாவது: நாய்களெல்லாம் பிரமாணிக்கமுள்ளது. The crow is cunning. காக்கை கபடுள்ளது. அதாவது: காக்கைகளெல்லாங் கபடுள்ளது எனவரும். ஆகிலுந் The என்பதை வைக்காமலப் பெயர்ச்சொற்களைப் பன்மையிலும் வைக்கலாம். உ-ம். Dogs are faithful. நாய்கள் பிரமாணிக்கமுள்ளது. அதாவது: நாய்களெல்லாம் பிரமாணிக்கமுள்ளது. Crows are cunning. காக்கைகள் கபடுள்ளது. அதாவது: காக்கைகளெல்லாங் கபடுள்ளது. என்வரும்.

10. முன்னே குறித்துப் பேசப்பட்டவைகளை அல்லது வஸ்துவைக் குறிக்கிற பொதுப்பெயர்ச்சொல் திரும்பவந்தால் அதற்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உ-ம். The man is come here. அந்தமனிதனிங்கே வந்தான். என்பது முன்னே நான் சொன்ன மனிதன் என்று பொருடரும்.

11. சம்பந்தச்சொல்லின் முன்மொழியானது குறிப்பிட்டவொன்றாயிருந்தாலதற்குமுன் பெருமையுறு, ம் The என்பதை வைக்கவேண்டும். உம்: The boy, who bought the book, is gone. புத்தகத்தை விலைக்கு வாங்கினபையன் போய்விட்டான். என்வரும்.

12. உரிச்சொற்கள் பன்மைப்பெயர்ச்சொற்களாகும்போது அவைகளுக்குமுன் The என்பதைவைக்கவேண்டும். உம். Virtuous. புண்ணியமுள்ள. The virtuous. புண்ணியவான்கள். Wicked. கெட்ட. The wicked. கெட்டவர்கள். என்வரும்.

13. யாதொரு உரிச்சொல்லானது பட்டப்பெயராக வரும்போது அதற்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உம். Pope Gregory the Great. பெரிய கிறகோரியென்னும் பாப்பானவர். Charles, the Bald was king of France. வழுக்கைத்தலைச்சார்லேஸ் என்பவன் பிராஞ்சு தேசத்துக்கிராசாவாம். என்வரும்.

14. ஒப்பனைமேன்மையுரியிலுள்ள வினையுரிச்சொற்கள் வசனத்தின் கடைசியிலே தனியே வரும்போது அவைகளுக்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உம். He persuaded me the more easily. நான் அதுக்கு மகா வெளிதாயிணங்கும்படி செய்தான். It is he that studies the least. சகலரிலுங் கொஞ்சம் படிக்கிறவனிவன்தான் என வரும்.

15. எவனோ அவனென்பதற்கு இங்கிலீஷில் யாதொரு உரிச்சொல்லாவது வினையுரிச்சொல்லாவது ஒப்பனையுரியில் வரும்போது அதுக்குமுன் The என்பதை வைக்கவேண்டும். உம். எவ்வளவ

திகம் படிக்கிறேனோ-அவ்வளவதிகம் படிப்பிலே வர்த்திக்கிறேன் The more I study, the more I improve. எவ்வளவு கொஞ்சம் படிக்கிறேனோ அவ்வளவு கொஞ்சம் படிப்பில் வர்த்திக்கிறேன். The less I study, The less I improve. எவ்வளவதிகம் விளையாடுகிறேனோ அவ்வளவு கொஞ்சம் படிப்பில் வர்த்திக்கிறேன். The more I play, the less I improve. எனவரும். மேற்சொல்லப்பட்ட வசனங்களினருத்தம் மாறாமல் வேறேவிதமாய் வைக்கலாம். உ-ம். I improve so much the more, as I study the more. I improve so much the less, as I study the less. I improve so much the less, as I play the more. எனவரும்.

அன்றியும் - அவனெவ்வளவு ஆஸ்திக்காரனாயிருக்கிறானோ அவ்வளவு பொருளாசையுள்ளவனாகிறான் - என்பதற்கு The richer he is, the more covetous he becomes அல்லது He becomes so much the more covetous, as he is the richer. என்வும். அவனிடத்திலெவ்வளவு கொஞ்சம் பணமுண்டோ அவ்வளவதிகம் பத்தி காண்பிக்கிறான் - என்பதற்கு. The less money he has, the greater piety he shows. அல்லது He shows so much the more piety, as he has the less money. எனவரும்.

16. மேன்மையுரிக்குறுகள் பெரும்பாலும் the என்பதை வைக்கவேண்டும். உ-ம். He is the happiest of men. அவன் மனிதரில் மிகவும் பாக்கியவான். He is the most wealthy man in the City. இப்பட்டணத்திலுள்ளவர்களில் அவன்தான் மிகவும் ஆஸ்திக்கா

ரன்- எனவரும்.

17 First முதல். Second. இரண்டாம். Third. மூன்றாம். Fourth. நான்காம். Etc. முதலிய கிரமவெண்ணுப்பெயர்களுக்கும்பின். ஒருபெயர்ச்சொல்சேர்ந்துவரும்போது அவ்வது இராசாக்கள்முதலியவர்களொருவருக்குப்பின் ஒருவர் தொடர்ந்து வருமுறையையும், மாதத்திலுள்ள தேதியையும், யாதொருபுத்தகத்திலுள்ள அதிகாரம்- பிரிவு- பக்கமுதலியவைகளையுங்குறிப்பதற்கு மேற்படி கிரமவெண்ணுப்பெயர் வரும்போது- அவைகளுக்குமுன்- The- என்பதை வைக்கவேண்டும். உ-ம். The first boy shall receive a picture. முதலில் வருகிறபையன் ஒரு படம்பெற்றுக்கொள்ளுவான். George the third was born on the fourth of June. மூன்றாம். ஜார்ஜென்பவன் ஜூன்மாதம் நாலாம்தேதியிற்பிறந்தான். Book the fifth, chapter the sixth, section the seventh, page the eight. ஐந்தாம்புத்தகம். ஆறாம் அதிகாரம். ஏழாம்பிரிவு எட்டாம்பக்கம்- எனவரும்.

---

III. When must we omit the article?

1. புண்ணியம்- இரக்கம்- ஆகாயம்- குணம்- சாஸ்திரம்- கல்வி- பஞ்சலோகம்- புல்- தானியம்- நிறம்- மாதம்- அளவு- முதலியவைகளைக்குறிக்கிறபெயர்ச்சொற்களுக்குமுன்- ஒருசார்புச்சொல்லையும்வைக்கவேண்டாது. உ-ம். Humility is commendable. தாழ்மையானது புகழ்ச்சிக்குரியதாம். Envy is odious. காய்மகாரமானது அருவருப்புக்குரிய

நாம். Anger is to be avoided. கோபத்தை நீக்கிவிடவேண்டும். Indolence is harmful. சோம்பல் தீமைக்கேதுவானதாம். Astronomy is very useful. சோதிட சாஸ்திரமானது மிகவும் பிரயோசனமுள்ளதாம். Painting is a wonderful art. சித்திரமானது ஆச்சரியமான கல்வியாம். Gold is yellow. தங்கமானது மஞ்சள் நிறமாயிருக்கின்றது. Grass is green. புல் பச்சை நிறமாயிருக்கின்றது. Rice is cheap. அரிசி மலிவாயிருக்கின்றது. I like blue better than white. வெள்ளைநிறத்தைப்பார்க்க நீலநிறமெனக்கதிகப்பிரியம். December is the last month of the year. மார்கழிமாதமானது வருஷத்தின் கடைசி மாதமாம். This wall is eight feet in height, twelve in length and two in breadth. இந்தச்சுவர் எட்டடியுயரமும் பன்னிரண்டடி நீளமும் இரண்டடி அகலமுமாயிருக்கின்றது என வரும்

2. சிறப்புப்பெயர் ஒருமையில் வரும்போது அதற்குமுன்னொரு சார்புச்சொல்லையும் வைக்கவேண்டாது. உ-ம். John. அருளப்பன். Rengasammy. இரெங்கசாமி என வரும்.

[illegible] இவ் வொழுங்குக்கு விரோதமாய் வருவனை [illegible] பக்கம். [illegible] ஒழுங்கிற் காண்க.

3. Man மனிதன் என்பது சகல மனிதரையும் woman பெண்பிள்ளை என்பது சகல பெண்பிள்ளைகளையுங் குறிக்கும்போது இவைகளுக்குமுன்னொரு சார்புச்சொல்லையும் வைக்கவேண்டாது. உ-ம். Man is mortal. மனிதன் சாவுக்குள்ளான

வன். என்பது சகல மனிதருந் தாவுக்குள்ளா னவர்களென்றும். Woman is timid. பெண்பிள்ளை பயமுள்ளவள். என்பது சகல பெண்பிள்ளைகளும் பயமுள்ளவர்களென்றும். Virtue ennobles man. புண்ணியம் மனிதனை மேன்மைப்படுத்துகின்றது. என்பது சகல மனிதரையுமேன்மைப்படுத்துகின்றது. என்றும் பொருள்படும்.

4. Heaven, மோக்ஷம். Paradise. பரகதி. Purgatory. உத்தரிக்கிறஸ்தலம். Hell. நரகம். என்னுமிந்நான்கு பெயர்ச்சொல்லின்முன். ஒருசார்புச் சொல்லையும் வைக்கவேண்டாது. உ-ம். God is in heaven, on earth and in hell. சர்வேசுரன் மோக்ஷத்திலும். பூமியிலும். நரகத்திலுமிருக்கிறார். என்வரும்.

5. அன்றியும். Air. ஆகாயம். Earth. பூமி. Water. தண்ணீர். Fire. நெருப்பு. என்னுமிந்நான்கும். யாதொருவிசேஷமான ஆகாயம். யாதொருவிசேஷமான பூமி Etc. முதலியவைகளைக்குறிக்காத போது. இவைகளுக்குமுன்னுமொருசார்புச் சொல்லையும் வைக்கவேண்டாது. உ-ம். Air is lighter than water. ஆகாயமானது தண்ணீரைப்பார்க்கத் திலேசாயிருக்கின்றது. Fire is a useful element. நெருப்பானது பிரயோசனமுள்ள பூதியமாம். என வரும்.

☞ இன்னமேச்சமயங்களிலொருசார்புச் சொல்லையும் வைக்கவேண்டாதென்று. உரைக்கும் பக்கம் (௨௰. ௫) என்னும் விவரத்திலும். பின்வருமோ

முங்கிலும். ௨௱௩௨. பக்கம். ௩௨. ஒருங்கின் கடைசியிலுங் காண்க.

# ON ADJECTIVES

1. When are adjectives placed after the noun?

1. உரிச்சொல்லுக்குப்பின் - உடனேயொருமுன்னிடைச்சொல் வரவேண்டியிருந்தால் அவ்வுரிச்சொல் தானாரும் பெயர்ச்சொல்லுக்குப்பின்வரும் இப்படியே - எனக்குப்பிரியமானமனிதன் - என்பதற்கு - a kind man to me. என்றுசொல்லாமல் a man kind to me. என்றும். மகிமையின் பேராசையுள்ளமனிதன் - என்பதற்கு. an ambitious man of glory - என்றுசொல்லாமல் a man ambitious of glory. என்றுஞ் சொல்லவேண்டும்.

2. உரிச்சொல்லானது பட்டப்பெயராக வரும்போது பெயர்ச்சொல்லுக்குப்பின் வரும். உ-ம். Alexander the Great. பெரிய அலெக்சாந்தரென்பவன் - என வரும்

3. உரிச்சொல் அழுத்திச் சொல்லவேண்டிய போது பல்முறையது பெயர்ச்சொல்லுக்குப்பின் வரும். உ-ம். Goodness infinite. அளவில்லாத நன்மைத்தனமே - என வரும்.

4. பலவுரிச்சொற்களோரேயுரிச்சொல்லைச் சாரும்போது. உரிச்சொல் அது பெயர்ச்சொல்லுக்குமுன்னே வரலாம் அல்லது பின்னே வரலாம்

உ-ம். நீதியும்-ஞானமும்-பிறசிநேகமுமுள்ள மனிதன்-என்பதற்கு a just, wise and charitable man. அல்லது- a man just, wise and charitable.

5. உரிச்சொல்லுக்குமுன் பலவகையுள்ள வினையுரிச்சொல் வரவேண்டியபோது பலமுறையும் உரிச்சொல் பெயர்ச்சொல்லுக்குப்பின்வரும். உ-ம். a boy, extraordinarily clever. மிகவுங்கெட்டிக்காரப்பையன்-என்வரும்.

6. அளவைக்குறிக்கிறவுரிச்சொற்கள்தாங்கள்சாரும் பெயர்ச்சொல்லுக்குப்பின்வரும் உ-ம். a tower sixty feet high stands near our house. அறுபதடியுயர்மான கோபுரமெங்கள் வீட்டுக்கிட்டவிருக்கின்றது. This wall is twenty feet long. இந்தச்சுவர்-இருபதடிநீளமாயிருக்கின்றது. என்வரும்.

7. Alone. என்பது தான்சாரும்பெயர்ச்சொல்லுக்குப்பின்வரும். உ-ம். your friend alone was there. உன் சிநேகிதன்மாத்திரமங்கேயிருந்தான்-என்வரும்.

8. கடைசியாய் அதிலேயொன்றும் நல்லதில்லை என்பதற்கு There is nothing good in it. என்வும் அவன் சொல்லுகிறதிலே கொஞ்சமெய்யிருக்கின்றது-என்பதற்கு. There is something true in what he says. என்வருமுரிச்சொல் பெயர்ச்சொல்லுக்குப்பின் வரும்.

# ON THE COMPARATIVE Degree

1. ஒப்புமையாகிய வினைமொழி. குறித்திருக்கிற சொல்லியவாறே உயர்வொப்புமையிற்கும் - இழிவொப்புமையிற்கும்பின் - Than என்பதை வைக்கவேண்டும். உ-ம். I am wiser than you. உன்னைப்பார்க்க நானதிக விவேகமுள்ளவன் - I am less wise than you. உன்னைப்பார்க்க நான்கொஞ்சம் விவேகமுள்ளவன் - எனவரும்.

விவரம்

1º ஒப்புமைப்படுகிற வினைச்சொற்களுக்குள் - இங்கிலிஷில் - Than - என்பதற்குப் பின் வருஞ்சொல் வெற்றுவேற்றுமையிலிருக்கும்பொழுது வேற்றுமையிலேதான் பிரயோகஞ் சொல்லப்படவேண்டும். உ-ம். அவனென்னைப்பார்க்க அதிக விவேகி - என்பதற்கு - He is wiser than I. என்று சொல்லவேண்டுமேயொழிய. He is wiser than me. என்று சொல்லவொண்ணாது. அவளென்னைப்பார்க்க அவனையதிகமாய்ச் சிநேகிக்கிறாள் - என்பதற்கு. She loves him more than me. என்று சொல்லவேண்டுமேயொழிய. She loves him more than I. என்று சொல்லவொண்ணாது.

2º ஒப்புமையிலேயோ - எண் - அளவு - நிறையைக் குறிக்கிற சொற்கள் வரும்போது - எண் - அளவு - நிறையைக் குறிக்கிற சொற்களுக்கு முன் - த்யில் வந்தது - அவைகளுக்குமுன் - by - என்பதை வைக்கவேண்டும். அல்லது அவைகளையொப்புமையைச் சொல்லுக்குப் பின்னேவைத்தால்

கருக்குமுன் - ஒன்றும் வைக்க வேண்டாது. உம்
நீயென்னைப்பார்க்கிலும் இரண்டு அங்குலமுயரமா
யிருக்கிறாய் - you are taller than I by two inches அ
ல்லது you are two inches taller than I. எனவும்.
இந்தஅரிசிமூட்டையதைப்பார்க்க மூன்றுறாத்தலா
மதிகப்பாரமாயிருக்கின்றது. This load of rice
is heavier than that by three pounds. அல்லது This
load of rice is three pounds heavier than that.
எனவும் வரும் இவைகளிற்பிந்தின விதமதி
கநலமென்றறிக.

N.B. மிகவும் - என்பது - உரிச்சொல்லுக்குமு
ன் வந்தால் - very - என்பதையும் பெயரெச்சத்
துக்குமுன்வந்தால் - much - அல்லது very much.
என்பதையும் வைக்கவேண்டும். உம் மிகவும்ந
ல்ல. very good. மிகவுங்கஸ்தியுள்ள - much grie-
-ved. மிகவும்பயப்படுகிற - very much dreading.

## On Pronouns

1. யாதொருவஸ்து உயிரில்லாதவஸ்துவானாலு
மது - மேன்மை - பலம் - தன்னிடத்திலுள்ளதைம
ற்றவைகளுக்குக்கொடுக்கத்தக்கதத்துவமுதலிய
குணங்களையுடையதானால் அதைச்சொல்லும்பெய
ருக்குப்பிரதிச்சொல்லு ஆண்பாலில் வைக்
கலாம் - இப்படியே - Time - காலமானது - கடந்த
பின்னைத்திரும்ப வரும்படியொருவராலு
ம் செய்யக்கூடாதிருக்கும் - Ocean - சமுத்திர

மானது ஒருவருக்குங் கீட்படியாததினாலும். Sun.
சூரியனானது தன் வெளிச்சத்தைச் சந்திரனு
க்குக் கொடுப்பதினாலும். இவைகளைக்குறித்து
He - His - him - என்று இங்கிலீஷில் சொல்லலா
ம்....

2. யாதொன்றைப் பிறப்பிப்பதற்கும். அடக்
கிக் கொள்ளுவதற்கும். சக்திவத்தையுடைய
வஸ்துக்களைப் பெண்பாலாகப் பாவிக்கலாம்.
இப்படியே Moon சந்திரனானது சூரியனிடத்
திலே தன் பிரகாசத்தை வாங்கிக்கொள்
ளுவதினாலும். Earth பூமியானது விருக்ஷசாதி
களைப் பிறப்பிப்பதினாலும். Country - தேசம்.
City - பட்டணம். Church - கோவில். Ship - கப்பல்மு
தலியவைகள் மனிதரையும் வஸ்துக்களை
யுமடக்கிக்கொள்ளக் கூடியவையிருப்பதாலு, ம
வைகளைக்குறித்து - She, her, Etc. என்று சொல்
லலாம்.

3. அன்றியும் பட்சிமுதலிய மிருகங்களில் ஆ
ணுக்கு He, his, him, என்று ஆண்பாலையும் பெ
ண்ணுக்கு She, her Etc. என்று பெண்பாலையும்
வைக்கலாம்.

4. தமிழில் - எவள்வு யென்பதற்குப் பின் - ஆலும் -
என்பது வரும்போது ஷ - எவள்வு யென்பதுக்கு
ப் பின் ஒரு உரிச்சொல்மாத்திரம் வந்தால் —
However என்பதையும் பெயர்ச்சொல் அல்லது
உரிச்சொல்லும் பெயர்ச்சொல்லுஞ் சேர்ந்துவ
ந்தால். Whatever என்பதையும் வைப்பதற்கு

தை- உ-ம். நீயெவ்வளவு ஆஸ்திக்காரனாயிருந்தாலும். However rich you may be. எனவும் நீயெவ்வளவு ஆஸ்தியைக் கொண்டிருந்தாலும். Whatever riches you may have. என்றும் நீயெவ்வளவு மிகுந்த ஆஸ்தியைக் கொண்டிருந்தாலும். Whatever great riches you may have. எனவும் வரும்.

5. அன்றியும் - அவனதிகாரமெவ்வளவு பெரிதாயிருந்தாலும் - என்பதற்கு - இங்கிலிஷிலே -
Whatever his authority may be — அல்லது
Whatever be his authority — அல்லது
Whatever great his authority be — அல்லது
Though his authority be ever so great — அல்லது
Let his authority be ever so great — அல்லது
Let his authority be what it will — என்று
சொல்லலாம்.

---

## ON VERBS

1. செய்கையுமதைச் செய்தநேரமுமுடிந்து போனால் - Past tense - இறந்தகாலத்தை வைக்க வேண்டும். உ-ம். I saw him last year. போனவருஷம் அவனைக் கண்டேன். I saw him yesterday. நேற்று அவனைக் கண்டேன் - என வரும்.

2. செய்கைமுடிந்திருந்தாலும் அதைச் செய்த நேரமின்னமுடியாதிருந்தால் - Perfect tense - நிகழிறந்த காலத்தை வைக்கவேண்டும். உ-ம். I have been travelling this year. இந்த வருஷம்-

பயனாகுஞ் செய்தேன். I have seen him to-day. இன்றைக்கவனைக் கண்டேன்-என்வரும்.

3. ஒரு இறந்தகாலச்செய்கைக்கு முன்னே ஒரு செய்கைநடந்திருந்தாலதை pluperfect tense இறப்பிலிடையிறந்தகாலத்தில் வைக்கவேண்டும்; உ-ம். அவன் வருமுன்னே நானென்னுடைய வேலையை முடித்துப்போட்டேன். I had finished my task before he came. என்வரும்

4. எதிர்காலத்துக்கு-will-என்பதை வைக்கும்போது வினையாற்குறிக்கப்பட்ட செய்கையை எழுவாயாற்குறிக்கப்பட்டவன் தன்மனதின்படி செய்வானென்றும் Shall என்பதை வைக்கும்போது தன்மனதின்படி செய்யாமல் வேறொருகாரணத்தைப்பற்றியவன் செய்வதற்கேதுமையென்றும் பொருள்படும். உ-ம். Peter will learn. இராயப்பன்படிப்பான்-என்வரும் இது இராயப்பன் தனக்குமனதிருக்கிறபடியினாலே படிக்கிறான்-இல்லாவிட்டாற்படியாதிருக்கலாம்-என்று பொருள்படும். ஆனால்-Peter shall learn-இராயப்பன்படிப்பான்-என்வரும். இது-இராயப்பனுக்குமனதிருந்தாலுமில்லாவிட்டாலும் படிக்கவேண்டுமென்று பொருள்படும்.

N.B. Will-என்பதுக்குச்சொன்னது-Would-என்பதுக்கும்-Shall-என்பதுக்குச்சொன்னது-Should-என்பதுக்கும் பொருந்தும்.

# On Prepositions

| | |
|---|---|
| To abide by | He abides by what he says. அவன்சொல் லுகிறதுக்கிணங்கினான். |
| To abound with | France abounds with fruit. பிராஞ்சுதேசத்திலே பழம் ஏராளமாயுண்டு. |
| To accept of | I accepted of a rupee from him. அவனிடத்திலே ஒரு ரூபாயை வாங்கிக்கொண்டேன். |
| To account for | I account for that. அதுக்கு நியாயஞ்சொல்லுகிறேன். |
| To acquiesce in | I acquiesce in it. அதுக்குச் சம்மதிக்கிறேன். |
| To act up to | They act up to their principles. அவர்கள் தங்கள் சித்தாந்தத்துக்கொத்தபிரகாரம் நடக்கிறார்கள். |
| To admit of | I admit of that. அதுக்கு உத்தரவு கொடுக்கிறேன். |
| To adorn with. | I adorn with flowers. பூக்களைக்கொண்டு அலங்கரிப்பும் போட்டுத் தொடுக்கிறேன். |
| To advise with. | I advise with my father. என் தகப்பனிடத்தில் ஆலோசனை கேட்கிறேன். |
| To agree about or in | They agree about that or in that. அதை ஒத்துக்கொள்ளுகிறார்கள். |
| To aim. at | I aim at that. என்னுடைய அபிப்பிராயமெல்லாம் அதின்பேரிலேதான். |
| To animadvert on. | He animadverts on my conduct. என் நடக்கையின்பேரிலே யேயவனுக்குக் கண்ணிருக்குது. |
| To answer for. | I answer for that. அதுக்கு நானுத்தரவாதப்படுகிறேன். |
| To apologize to for | He apologizes to me for his error. தன் தப்பிதத்துக்காக அவன் என்னிடத்திலே போக்குச் சொல்லுகிறான். |
| To approve of | He approved of my intention. என் கருத்தை யேற்றுக்கொண்டான். |
| To argue from | I argue from your assertions. நீசொல்லுகிறதைக்கொண்டு தொனிப்பிக்கிறேன் |

| | | |
|---|---|---|
| To ask | of | I asked of him. அவனிடத்திற் கேட்டேன். |
| | for | I asked for a book. ஒருபுத்தகங் கேட்டேன். |
| | after | He asks after your son. உன்மகனைவாச்சொல்லுகிறான். |
| To aspire | after or at | He aspires after honour or at honour. மகிமையைத் தேடித்திரிகிறான். |
| To atone | for. | He atones for his sins. தன்பாவங்களுக்காக உத்தரிக்கிறான். |
| To attend | on | I attend on this gentleman. இந்தத்துரையிடத்திலே சேவகம்பண்ணுகிறேன். |
| To awe | into | I awe him into silence. அவன்பேசாதபடிக்கு அமர்த்துகிறேன். |
| To bail | out | He bailed out his friend. தன்சிநேகிதனுக்காகப்பிணைப்பட்டான். |
| To bale | up | He bales up his cloth. பிடவைகளைக்கட்டை கட்டுகிறான். |
| | out | He bales out the boat. ஓடத்திலிருந்து தண்ணீரையிறைக்கிறான். |
| To bar | up | He bars up his door. அவன்தன்கதவைத்தாழ்ப்பாழ்ப்போடுகிறான். |
| To bargain | for | You bargain for a horse. ஓர்குதிரைக்குவிலைதீர்க்கிறாய். |
| To bark | at | The dog barks at you. நாயுன்னைக்கண்டு குலைக்கின்றது. |
| To barrel | up | You barrel up pork. பன்றியிறைச்சியைப் பீப்பாயிலேபோட்டுஅடைக்கிறாய். |
| To bask | in | I bask in the sun. வெய்யிலிற்காய்கிறேன் |
| To bawl | out | I bawl out. நான் கத்துகிறேன். |
| To bay | at | The dog bays at me. நாயென்னைக்கண்டு குலைக்கின்றது. |
| To be | in | I am in the wrong. நான்சொன்னது அல்லது செய்தது தப்பிதந்தான். |
| | in-for | I am in for it. நானதிலேயுடன்பட்டிருக்கிறேன். அல்லது அகப்பட்டுக்கொண்டேன். |
| | out-with | I am out with him. அவனுக்கு மெனக்குஞ் சிநேகமற்றுப்போனது. |
| | out | I was out. எனக்குவாய்தவறிப்போனது. |
| To bear | hard-upon | He bears hard upon me. அவனென்மேலே வெடுவெடென்று விழுகிறான். |
| | away. | He bears away the prize. அவன் வெகுமதியைக்கொண்டுபோகிறான். |

**To bear**

- away. — The ship bears away. கப்பல் ஓடிப்போகிறது.
- down. — The ship bears down upon us. கப்பல் நமக்குக் கிட்ட வருகின்றது.
- into — The ship bears into the port. கப்பல் துறைமுகத்துக்கு ஓடிவருகின்றது.
- off — He bears off his prize. அவன் வெகுமதியைக் கொண்டுபோகிறான்.
- off. — He bears off. அவனப்பாலே போகிறான்
- on / upon — You bear on me. நீ என் மேலே நம்பிக்கை வைக்கிறாய்.
- Out — He bears out his conduct. அவன் ஒழுங்காய்த் திரிநடக்கிறான்
- out — This part of building bears out. இந்த வீட்டின் பக்கமானது எல்லையைக் கடந்துபோகின்றது.
- towards — He bears towards us. அவன் நமக்குக் கிட்ட வருகிறான்.
- up. — He bears up against misfortune. நிர்ப்பாக்கியத்தைச் சகிக்கிறான்.
- with. — He bears with your bad temper. உன்னுடைய சுடுமூஞ்சித்தனத்தைச் சகிக்கிறான்.

**To beat**

- back — They beat back the enemy. சத்துருவைப் பின்வாங்கவடிக்கிறார்கள்.
- down. — You beat down his price. அதின் விலையைக் குறைக்கிறாய்.
- up. — We beat up the quarters of the enemy. சத்துருக்களுடைய பாளயத்தின் மேலே போய் விழுகிறோம்.
- Out — They beat out his brains. அவன் மூளை தெறிக்கவடித்தார்கள்.
- about. — They beat about. ஒன்றாய்த் தேடுகிறார்கள்.

**To beg** for — They beg for peace. அவர் சமாதானமாய்ப் போகக் கேட்கிறார்கள்.

**To bellow** out. — He bellows out. அவன் நிலைதெறிக்கக் கத்துகிறான்.

**To bestow** upon — God bestowed upon you such beauty. சர்வேசுரன் உனக்கவ்வளவு அழகைக் கொடுத்தார்.

**To bethink one's self** of — I bethought my self of that. அதின்மேலே எனக்கு நினைவு வந்தது.

| | | |
|---|---|---|
| To beware | of | I beware of that. [illegible] யிருக்கிறேன். |
| To bind | up | I bind up my leg. [illegible] றேன். |
| To blab | out | He blabs out the secret. இரகசியத்தை [illegible] கிறான். |
| To blame | for | I blame you for that. அதினிமித்தம் [illegible] குறைசொல்லுகிறேன். |
| To block | up | They block up the fort. கோட்டையை [illegible] வளைந்துகொள்ளுகிறார்கள். |
| To blot | out | I blot out your name. உன்னுடைய பெயரைக் கிறுக்கிப்போடுகிறேன். |
| To blow. | out | I will blow out your brains. உன் [illegible] பேன். |
| | up | They blow up the magazine. அவர்கள் [illegible] கிறார்கள். |
| | down | The wind blows down the house. காற்று [illegible] வீட்டை விழத்தாட்டுகிறது. |
| | off | The wind blows off my hat. காற்று என் தொப்பியைக் கொண்டுபோகின்றது. |
| | over. | The storm blew over. புயல் [illegible] போனது. |
| To blunder | out. | He blunders out a word. ஒரு வார்த்தை [illegible] யாமல் சொல்லுகிறான். |
| To blush. | for | He blushes for shame. வெட்கத்தினாலே [illegible] போகின்றது. |
| | at | He blushes at that. அதினாலே வெட்கப் [illegible] |
| To bluster | out / about | He blusters out that. He blusters about that. அதின்பேரில் [illegible] கிறான். |
| To boggle | at | He boggles at that. அதின்பேரில் [illegible] கிறான். |
| To border | on. | That borders on destruction. அது [illegible] கிட்டியிருக்கின்றது. |
| To bottle | up | I bottle up wine. [illegible] விட்டு அடைக்கிறேன். |
| To branch | out. | The tree branches out. [illegible] |
| To brawl | about. | He brawls about that. [illegible] |
| To brazen | out. | He brazened out the business. [illegible] செய்தான். |

asunder. He breaks asunder. உடைக்கிறான்-நொருக்கிறான்.

out of. He broke out of prison. சிறைச்சாலையிலிருந்து தப்பித்து ஓடிப்போனான்.

out into. He breaks out into a passion. மிகவுங் கோபித்துக்கொள்ளுகிறான்.

off. He breaks off the negociation. அந்த வுடன்படிக்கையை மறுக்கிறான்.

forth into. He breaks forth into an exclamation. ஆ!வென்று பிரமித்துக்கொண்டான்.

To break into. He breaks into a house. பலவந்தமாய் வீட்டுக்குள்ப்பிரவேசிக்கிறான்.

in upon. He breaks in upon our conversation. நாம் பேசும்போது ஊடே பேசுகிறான்.

through. He breaks through the wall. சுவற்றின்மேலேறிக்குதிக்கிறான்.

up. He breaks up the meeting. சபைக்கூட்டத்தைக் கலைக்கிறான்.

down. He breaks down a hedge. வேலியைப்பிரித்தெறிகிறான்.

To breakfast upon. I breakfast upon eggs. பழையமுதுக்குமுட்டை சாப்பிடுகிறேன்.

To breathe out. He breathes out curses. சாபமிடுகிறான்.

about. I brought about that. அதை நிறைவேற்றினேன்.

away. He brings away the prize. வெகுமானத்தைக் கொண்டுபோகிறான்.

off. I bring him off. அவனையிக்கட்டிலிருந்துவிடுவிக்கிறேன்.

forth. She brings forth a child. அவள் குழந்தை பெறுகிறாள்.

To bring. on. I bring him on. அவனையிணக்குகிறேன்.

over. I bring him over to my side. அவனை என் பக்கத்திலே சேர்த்துக்கொள்ளுகிறேன்.

under. I bring him under. அவனைக் கீழ்ப்படுத்துகிறேன்.

in. I bring him in. அவனைப் பிரவேசிக்கப்பண்ணுகிறேன்.

out. I bring that out. அதை வெளியிலே வரப்பண்ணுகிறேன்.

up. She brings up a child. அவள் குழந்தையை [illegible]

| | | |
|---|---|---|
| | | க்கிறான். |
| To bring. | up. | He brings up the rear. பின்படையைக் காக்கிறான். |
| | down. | He brings down his enemies. தன் சத்துருக்களைத் தாழ்த்துகிறான். |
| To brisk | up. | He brisks up. த[illegible] காண்பிக்கிறான். |
| To brood. | over. upon. | He broods over his money. பணத்தின்மே[illegible] வைக்கிறான். |
| To brush. | away. | He brushes away. தீவிரமாய்த் தப்பிப்போகிறான். |
| | by. | He brushes by me. எனக்குக்கிட்ட வேகமாய்க் கடந்துபோகிறான். |
| | up. | He brushes up. வேகமாய்க் கிட்டவருகிறான். |
| To bubble | up. | The water bubbles up. தண்ணீர் தளதளவென்று கொதிக்கின்றது. |
| To bud | out. | The tree buds out. மரந் துளிர்விடுகின்றது. |
| To build | up. | He builds up a house. வீடு கட்டியெழுப்புகிறான். |
| To bundle | up. | He bundles up his clothes. தன் பிடவைகளை மூட்டைகட்டுகிறான். |
| To buoy | up. | He buoys up his friends. தன் சிநேகிதரைக் காத்து நடத்துகிறான். |
| To burn | away. | The wood burns away. கட்டை நெருப்புப்பற்றி வெந்துபோகின்றது. |
| | to | The wood burns to ashes. கட்டை வெந்து சாம்பலாய்ப் போகின்றது. |
| | out | It is burnt out. அது அவிந்துபோனது. |
| To burst. | with. | He bursts with envy. காய்மகாரத்தினாலே கருகிப்போகிறான். |
| | forth. | He bursts forth into laughter. கெக்கலித்துச் சிரிக்கிறான். |
| | into. | He bursts into tears. தாரைதாரையாய்க் கண்ணீர் சிந்துகிறான். |
| To busy one's self. | with | He busies himself with my affairs. என்னுடைய காரியங்களில் கலந்துகொள்ளுகிறான். |
| To butt. | at. | The ram butts at me. ஆட்டுக்கடா என்னை முட்டுகின்றது. |
| To button | up. | He buttons up his coat. அவன் சட்டையைப் பொத்தான் மாட்டுகிறான். |

| | | |
|---|---|---|
| To buy | off. | He buys off his son. பணங்கொடுத்துத்தன் மகனை விடுதலையாக்குகிறான். |
| | up. | He buys up all the provisions. சாமான்களெல்லாம் விலைக்கு வாங்கிப்போடுகிறான். |
| | over. | He buys over all the members. சபையாரை விலைக்கு வாங்கிப்போடுகிறான். |
| | into | He buys into the army. பணங்கொடுத்துப் படையிலொரு உத்தியோகத்தை வாங்கிக்கொள்ளுகிறான். |
| | in. | He buys in goods. சரக்குகளை விலைக்கு வாங்குகிறான். |
| To call. | in. | Call in that man. அந்த மனிதனையுள்ளே வரச்சொல்லு. |
| | in. | You call in a law. ஒரு சட்டத்தைத் தள்ளுகிறாய். |
| | in | You call in question. சந்தேகப்படுகிறாய். |
| | off. | You call off my attention. எனக்குப் பராக்குக் காட்டுகிறாய். |
| | aside. | You call aside your son. உன் மகனைத் தனியே கூட்டிக்கொண்டு போகிறாய். |
| | forth. out. | He calls forth the militia. போர்ச்சேவகரைக் கூட்டுகிறான். சேர்க்கிறான். |
| | out-to. | He calls out to me. என்னைக் கூப்பிடுகிறான். |
| | to. | He calls to mind. அவனுக்கு நினைவு வருகின்றது. |
| | to. | He calls me to account. என்னிடத்தில் கணக்குக் கேட்கிறான். |
| | on. | He calls on you. உன் வீட்டிற்கு வந்து விட்டுப் போகிறான். |
| | on. upon | You call upon me. என்னை வரச்சொல்லுகிறாய். |
| | at. | You call at my house. என் வீட்டிற்கு வருகிறாய். |
| | for | You call for him. அவனை வரவழைக்கிறாய். |
| | up. | You call me up. என்னை யெழுப்புகிறாய். |
| | up. | You call me up. என்னை யேறிவரச்சொல்லுகிறாய்-அல்லது செய்கிறாய். |
| | down. | You call me down. என்னை யிறங்கிவரச்சொல்லுகிறாய்-அல்லது-செய்கிறாய். |
| | over. | Call over your company. உன்கூடச்சேர்ந்தவர்களைக் கூப்பிடு. |
| To care. | for. | He does not care for me. என் பேரில் அவனுக்குக் கவலையில்லை. |
| To carp. | at. | He carps at that. அதின்பேரில் குறைசொல்லுகிறான். |

| | | |
|---|---|---|
| To carry | away. | He carries away my money. என்பணத்தைக்கொண்டுபோகிறான். |
| | on. | He carries on the war. அவர் சண்டைபோடுகிறான். |
| | over. | I carried you over the river. நீயாற்றைக் கடக்கும்படிசெய்தேன். |
| | through. | He will carry himself through. காரியத்தை நிறைவேற்றுவான். |
| | off. | He carried off your son. உன்மகனைப்பிடித்துக்கொண்டுபோனான். |
| | about. | I carry no money about me. என்கையிலே பணம் வைக்கிறதில்லை. |
| To Cast. | up. | He casts up his dinner. பகற்சாப்பிட்டதை வாந்திபண்ணுகிறான். |
| | up. | He casts up his account. கணக்குப்பார்க்கிறான். |
| | away. | He casts away his money. பணத்தையெறிந்துபோடுகிறான். |
| | down. | He casts down his friends. தன் சிநேகிதரைக்கவிழ்த்துப்போடுகிறான். |
| | forth. | The sun casts forth his beams. தன்னுடைய கிரணங்களையெறிந்துபோடுகிறான். |
| | off. | He casts off his old friends. தன்பழைய சிநேகிதரைக்கைவிடுகிறான். |
| | off. | He casts off the dogs. நாய்களைவிலக்கிவிடுகிறான். |
| To catch. | at. | They catch at you. உன்னையேமாத்தப்பார்க்கிறார்கள். |
| | up. | They catch up a stick. ஒருதடியைப்பிடிக்கிறார்கள். |
| To Cavil. | at. | They cavil at the judgement. தீர்மானத்தின்பேரில்-குற்றங்காட்டப்பேசுகிறார்கள். |
| To chalk. | out. | They chalked out a line. வெள்ளைக்கட்டியாலொருகோடு-யிழுத்தார்கள். |
| To charge. | with. | I charge you with this business. உனக்கிந்த-அலுவல்கொடுக்கிறேன். |
| | with. | I charge you with this crime. உன்மேலிந்தப்பாதகத்தைச்சுமத்துகிறேன். |
| To charm. | with. | I am charmed with that. அதின்பேரில்மிக்க சந்தோஷப்பட்டேன். |
| To Cheer. | up. | They cheer up their soldiers. தங்கள் சேவ |

| | | |
|---|---|---|
| | | கதைத் தெரியப்படுத்துகிறார்கள்....... |
| To clear | away | They clear away the rubbish. குப்பையை யெடுத்துச் சுத்தம்பண்ணுகிறார்கள்.......... |
| To clear. | up. | They clear up the affair. காரியத்தைத் தெளிவேற்றுகிறார்கள்........ |
| To cleave | asunder. | He cleaves it asunder. அதைப் பிளக்கிறான். |
| To climb | up. | He climbs up the tree. மரத்தைத் தொற்றியேறுகிறான்......... |
| To cling | to. | He clings to me. என்னைக் கட்டிப்பிடிக்கிறான் |
| To close | up | He closes up the space. வெளியிடத்தை நிரப்புகிறான்......... |
| To cloud | over. | The sky is clouded over. மேகம்படர்ந்திருக்கின்றது......... |
| To cobble | up. | He cobbles up the affair. அந்தக் காரியத்தைப் பரும்படியாய்ச் செய்கிறான்....... |
| To cock | up. | He cocks up his nose. தலையை உயர்த்துகிறான் - அகங்காரங் காண்பிக்கிறான்...... |
| To coil. | up. | They coil up the cable. நங்கூரக் கயிற்றைச் சுருட்டுகிறார்கள்......... |
| To Come | to. | He is come to. இணங்குகிறான்........ |
| | off. | He comes off. விட்டுப்போட்டுவருகிறான். |
| | by. | How did you come by it. அந்தக் காரியம் அநுகூலம்பட்டதா?......... |
| | upon. | he comes upon me. என்மேலே விழுகிறான் - என்மேலே வருகிறான்.... ..... |
| To Comply | with. | He complies with the will of God. சர்வேசுரனுடைய சித்தத்துக்குத் தன்மனதைக் கீழ்ப்படுத்துகிறான்........ |
| | with. | He complies with his request. அவனுடைய மன்றாட்டுக்கு இணங்குகிறான்.... |
| To concur | in. | They concur in that. அதுக்குச் சம்மதிக்கிறார்கள்......... |
| To confide | in. | you confide in me. என்மேலே நம்பிக்கை வைக்கிறாய்......... |
| To connive | at. | I connive at your faults. உன் தப்பிதங்களைச் சகிக்கிறேன்......... |
| To consist | of. | His army consists of infantry and cavalry. அவனுடைய படையெல்லாங் காலாட்சேனையுங் குதிரைவீரருந்தான்.... |
| To console | for. | He is consoled for his loss. அவன் தனக்கு வந்த நஷ்டத்தினிமித்தம் போதரு |

| | | |
|---|---|---|
| | | ஒப்படைத்திருக்கிறான். |
| To consult | about. | I have consulted you about that. அதின் பேரில் உன்னிடத்தில் ஆலோசனைகேட்டேன். |
| To Cope | with. | You cannot cope with him. அவனோடே எதிர்த்து நிற்க உன்னாலே கூடாது. |
| To Cork | up. | You cork up a bottle. சீசாவுக்குத் தக்கை போட்டடைக்கிறாய். |
| To Cover | over. | He covers over his design. அவன் தன் கருத்தை வெளிவிடுகிறதில்லை. |
| To Count | up. | He counts up his gains. தனக்கு வந்த ஆதாயமிவ்வளவென்று கணக்குப்பார்க்கிறான். |
| To cringe | to. | He cringes to the mob. கலகக்காரனாகவிருந்து பணிந்துகொள்ளுகிறான். |
| To Cry | out to. | He cries out to me. என்னைக்கத்திக் கூப்பிடுகிறான். |
| | out against. | He cries out against me. எனக்கு விரோதமாய்க் கத்துகிறான். |
| | up | He cries up his goods. தன் சரக்குகளையேலங் கூறுகிறான். |
| | down. | He cries down my goods. என் சரக்கு உதவாதென்று சொல்லுகிறான். |
| | unto. | He cried unto God. சர்வேசுரனை நோக்கி அபயமிடுகிறான். |
| | out. | He cried out. பிரமித்துச் சொன்னான். |
| To Cull. | out | He culls out the best. மிகவும் நல்லதுகளைத் தெரிந்துகொள்ளுகிறான். |
| To Curb | up. | He curbs up his horse. தன் குதிரையையடக்குகிறான். |
| To Curl. | up. | He curls up hair. தன்மயிரைமுடிகிறான் (குடுமை முடிக்கிறது-கொண்டை முடிகிறது) |
| To Cut. | up | He cuts up a fowl. ஒரு கோழியையறுக்கிறான். |
| | out. | He cuts out a coat. ஒரு சட்டைக்கு வெட்டுகிறான். |
| | asunder. | He cuts asunder my arms. என் கைப்பட்டையை வெட்டுகிறான். |
| | away. | He cuts away the branches. கொம்புகளை வெட்டுகிறான். |

| | | |
|---|---|---|
| To deal. | to | I deal to you the cards. உனக்கு விளையாட்டுக் கடுதாசிகளைக் கொடுக்கிறேன்....... |
| | in | I deal in political matters. இராச்சிய முறையிலே கலந்து கொள்ளுகிறேன்..... |
| | with-by. | You deal ill with me. என்மட்டிற் கெடுதலாய் நடக்கிறாய்.................... |
| To debate. | on-upon | We debate on that subject. அந்தக் காரியத்தின் பேரில் தர்க்கமாடுகிறோம்....... |
| | about. | We debate about that. அதின் பேரில் தர்க்கமாடுகிறோம்..................... |
| To decide. | upon-on | I decide upon that case. அந்த வியாச்சியத்தின் பேரில் தீர்ப்புச் செய்கிறேன்.. |
| To design | for. | I design it for a sacrifice. அதைப் பலிக்காக வைத்திருக்கிறேன்........... |
| To dine | upon-on | I dine upon fish. மத்தியானச் சாப்பாட்டுக்கு மீன் சாப்பிடுகிறேன்......... |
| To dish. | up. | I dish up the meat. கறி பரிமாறுகிறேன். |
| To dispense | with. | I dispense you with that. அதைச் செய்யாதபடிக்கு உனக்குத் தர்வு கொடுக்கிறேன். |
| To do. | away. | I do away that objection. அந்த வெதிரிடையைத் தீர்த்துப் போடுகிறேன்... |
| | over. | I do over my shoes with black. என் சப்பாத்துக்குக் கறுப்பு மை பூசுகிறேன்... |
| | up. | I do up my bundle. என் மூட்டையைக் கட்டுகிறேன்............................ |
| | with. | I have done with that. அதை முடித்துப் போட்டேன்........................ |
| To domineer | over. | You domineer over me. என்மேலே கொடுங்கோன்மை செலுத்துகிறாய்.......... |
| To dote. | on-upon. | You dote upon him. அவனையுன் கண்மணியைப் போலே சிநேகிக்கிறாய்......... |
| To draw. | away | You draw away my friends. என் சிநேகிதர்களை யிழுத்துக் கொள்ளுகிறாய்........ |
| | along. | He draws along his leg. தன் காலை யிழுத்துக் கொண்டு நடக்கிறான்......... |
| | asunder. | He draws them asunder. அவர்களை வெவ்வேறாகப் பிரித்துப் போடுகிறான்..... |
| | in. | He draws in the ignorant. அறிவீனரை யிழுத்துக் கொள்ளுகிறான்............ |
| | on. | He draws on the enemy. சத்துருக்கள் தன்னைப் பின்றொடர்ந்து வரப்பண்ணுகிறான். |

| | | |
|---|---|---|
| To draw. | over. | He draws over the poor. எளியவர்கள் பாரிசமாகச் சேர்த்துக் கொள்ளுகிறான்.. |
| | out. | He draws out the army. படையை வரிசையாக அல்லது போரணியாக வைக்கிறான்..... |
| | up. | He draws up a writing. எழுதிவைக்கிறான் |
| | up. | He draws up his soldiers. தன் சேவகரை வரிசையாக, அல்லது போரணியாக வைக்கிறான். |
| | near. | He draws near us. நமக்குக் கிட்ட வருகிறான். |
| | off. | He draws off. அப்பாலே போகிறான்.... |
| To dress. | up. | You dress up your children. உன்மக்களை மிகவுஞ் சோடிக்கிறாய்.................. |
| To drink. | in. | He drinks in an error. அவன் தப்பறையை யேற்றுக்கொள்ளுகிறான்........ |
| | down. | He drinks down all. எல்லாத்தையுங் குடித்துப்போகிறான்................. |
| | off. | He drinks off his glass. கிளாசிலிருந்த தெல்லாங் குடித்துப்போகிறான்...... |
| | out-of. | He drinks out of a glass. கிளாசிலே குடிக்கிறான்.......................... |
| To drive. | away. | He drives away his enemy. தன் சத்துருவைத் துரத்துகிறான்................. |
| | out. | He drives out his wife. தன் பெண்சாதியைத் துரத்துகிறான்.............. |
| | on. | He drives us on. நம்மைத் தீவரித்து நடக்கச் செய்கிறான்.................. |
| | off. | He drives off the enemy. சத்துருவைத் துரத்துகிறான்.................... |
| | in. into. | He drives us in. நம்மையுள்ளேவரச் செய்கிறான்.......................... |
| To drop. | in | I dropped in at dinner time. மத்தியானஞ் சாப்பிடுங் கோத்திலுள்ளே பிரவேசித்தேன்...................... |
| | out | He dropped out. அவன் கருமம்மமைக் கடுபோனான்...................... |
| To dry. | up. | The Sun dries up the grass. சூரியன் புல்லை யெரித்துப் போடுகின்றது.......... |
| | up. | dry up your tears. உன் கண்ணீரைத் துடை. |
| To Eat. | up. | you eat up the loaf. அந்த அப்பத்தை முழுதுஞ் சாப்பிடுகிறாய்.............. |
| To Eke. | out. | you eke out the time. [illegible] கிறாய்.......................... |

| | | |
|---|---|---|
| To Except | against | I except against it. அதைத் தள்ளிப்போடுகிறேன் |
| To expostulate. | with / upon | I expostulate with him upon that Subject: அதின் பேரில் [illegible] |
| To face | down. | He faced down that story. அந்தக் கதை மெய்யென்று சாதித்தான். |
| | out | |
| | about. | He faced about. முகத்தைத் திருப்பினான். |
| To fail. | in. | He failed in that enterprise. அந்த [illegible] |
| To faint. | away. | I fainted away. மூர்ச்சையாய் விழுந்தேன். |
| To fall. | down. | He falls down. கீழே விழுந்தான். |
| | To | I fall to. துவக்குகிறேன். |
| | on. | Fall on. துவக்கு. |
| | in-with. | I fell in with an old friend. [illegible] |
| | into. | I fell into his scheme. அவனுடைய உபாயம் நல்லதென்று [illegible] |
